அவைக்காற்றுகைக் குழு
*Performing Troupe*
ක්‍රියාකරන අංශය

# கல்யாணி





நாடக
அரங்கியலுக்கான
வெளியீடு - 6,7

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

16

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்

**ஊட்டம் விருத்தி உறுதுணை ஒண்கலைகள்
நாட்டுவதே கொள்கை நமக்கு**

நூல்:- **கல்யாணி** (நாடகமும் அரங்கியலுக்குமானது)

வெளியீடு:- **அவைக்காற்றுகைக் குழு - சுன்னாகம்**

விலை:- **ரூபா 70.00**

அச்சு:- **தீரஜா பிறிண்டேர்ஸ், சுன்னாகம்**

அட்டைப் படம்:- **குரு ஸ்கிறீன் பிறிண்டேர்ஸ், திருநெல்வேலி**

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

**கல்யாணி,**
**அவைக்காற்றுகைக் குழு,**
**கே. கே. எஸ். றோட்,**
**மருதனார்மடம் சுன்னாகம்**
**01-03-2003**

2266 LP

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2/ 792.02

# உள்ளுறை

01) மனக்கோலம் 03

02) கலையும் அனுபவமும் 05

03) அரங்க ஆடை 08

04) செர்ரிப்பழத் தோட்டம் 15

05) நேர்காணல் 36

06) அரங்கியலும் வாழ்வியலும் 52

07) அரங்கில் வெளிப்பாட்டு வாதம் 54

08) குறுவினா விடை 56

09) அரங்கியற் பதங்கள் 58

10) நாடகப் படிமங்களின் பரிமாணங்கள் 59



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊட்டம் விருத்தி உறுதுணை ஓங்கலைகள்
நாட்டுவிதே கொள்கை நமக்கு

# மனக்கோலம்

## இனங்காணுங்கள், போற்றுங்கள்

கலையை - கலைஞரைப் போற்றும் போதே வாழ்வு இன்ப மாக மலர்கின்றது. கலை நூற்சஞ்சிகையான கல்யாணியை நாடகப்பிரியர்கள் - கலைஞர்கள் போற்றியதனால், அதன் பிரசுரத் தொகை அதிகரிக்கப்பட்டுள்ளது. அதனால் வாசகர்களோடு நாமும் மகிழ்கின்றோம் - உங்கள் கருத்துக்களோடு உறவாட விரும்பு கின்றோம். உங்கள் எண்ணங்களை எழுதுங்கள்.

எண்ண்ங்கள் உருவாக்கும் கருத்துக்கள் பரிமாறப்படும் போது கிளைச்சிந்தனைகள் தோற்றம் பெறும். இவைபோல பண்பாடுகள் பரிமாறப்படும் போது அவை விரவிக்கலந்து செம்மைப்பட்ட உயர்பண்பாடு தோன்றும். இவ்வுயர் பண்பாடு பொதுமைப்படும் போது இருவேறு சமூகங்கள் கூட ஒருமைப்பாடு காணும் - வேற்றுமை நீங்கித் திகழும்.. தமிழ் சிங்கள மக்கள் பன்நெடுங்காலமாக வாழும் இடம் நம்நாடு. இதுமட்டுமல்லாமல் தமிழ், சிங்களச் சமூகம் பண்பாட்டாலும் நெருங்கிய தொடர்புடையன. ஆதலால் தொடர்பற்ற வேறு இரண்டு சமுதாயத்தைவிட தொடர்புடைய இந்த இரண்டு சமுதாயமும் பண்பாட்டைப் பகிர்ந்து கொள்ளும் போது மிக்க நெருக்கமான உறவுடன் திகழுமென்பதில் வேறுபட்ட கருத்து இருக்க முடியாது. அந்தப் பண்பாட்டுப் பாலத்தை - உறவுப் பாலத்தை யாழ் திருமறைக் கலாமன்ற இயக்குனர் பேராசிரியர் நீ. மரியசேவியர் அடிகளார் மேற்கொண்டிருந்தமையால் சிங்களக் கலைஞர்கள் யாழ் வருகை தந்தனர். கலையுறவை வளர்த்துக் கொள்கிறார்கள். உறவு பாராட்டித் தம்முடன் தென்னிலங்கைக்கு அழைத்துச் சென்றனர், உறவாடினர். இச்செய்தியினைப் பத்திரிகை வாயிலாகப் படித்து மகிழ்ந்தோம். செய்தியால் ஈர்க்கப்பட்ட நாமும் எமது அமைப்பினூடாக அவ் அருமையைப் போற்றுகின்றோம். இந்த ஒருமைப்பாடு நமது நாட்டுக்கு இன்று அவசியமானது. **ஈதொன்று.**

யாழ் மண்ணில் இன்று அவசியமானது கலை ஒன்று கூடல் களையும் ஒருமைப்பாடுகளையும் வருகின்ற நாடகத்துறையூடாக வளர்த்து வந்த, வருகின்ற கலைஞர் குழந்தை ம. சண்முகலிங்கம் அவர்களை யாழ்ப்பாணச் சமூகம் பல சந்தர்ப்பங்களில் அவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேவையைக் கௌரவிக்க தவறியது. பிறர் பலத்திற் பிரபல்யம் பெற்ற யார் யாரோவெல்லாம் கலாபூஷணம் போன்ற பல விருதுகளைப் பெற்றுவர இவர் சேவை மறைக்கப்பட்டதோ! இல்லை, அறிந்தும் அறியாதது போல விடப்பட்டதோ! யாரறிவர். இந்நிலையை உணர்ந்ததாலோ என்னவோ மட்டக்களப்ப பல்கலைக்கழகம் 2001ம் வருடம் மார்கழி பதினைந்தில் (2001-12-15) உயர்விருதான கலாநிதிப்பட்டத்தை குழந்தை ம. சண்முகலிங்கத்துக்கு வழங்கியதும் ஆக்கங்களைச் சேவையை உரிய முறையில் கௌரவித்ததும் போற்றுவதற்குரியதாகும்.. **ஈதொன்று**

தன் வாழ்நாள் முழுவதும் கலையைப் போற்றி கலைப் பொருள்களைப் போற்றி கலைக்காக வாழ்ந்த கலைஞானி அமரர் அ. செல்வரத்தினமும் எங்கள் நெஞ்சில் நிழலாடுபவர். தொல்பொருள் ஆய்வுக்காகப் பிரமச்சரியங் காத்தவர். கலைச்சுவடிகளையும் வரலாற்றுச் சான்றுகளையும் பிறவற்றையெல்லாம் தேடித் தொகுப்பதன் அவசியத்தையும் உணர்ந்து தனிமனிதனாக நின்று பெருஞ் சாதனை நிலை நாட்டியவர். இவர் தொகுப்புக்களின் மூலம் மனித வரலாற்றையே உணரலாம்.. இவர் பெரும் பிரிவை எய்தியமை நமக்கெல்லாம் மிக்கதுயர் தரும் செய்தியாயிற்று. இவர் சேவை முழுமையாக கௌரவிக்கப்படவில்லை என்பதும் கசப்பான உண்மையே! மாமனிதரான இவரின் தேட்டமெல்லாம் காட்சிக் கூடமொன்றில் வைக்கப்பட வேண்டும். அவர் பெயர் நிலைக்க வேண்டும். இதை எம் சமூகம் செய்யுமா? செய்ய வேண்டுமென்பது எமது அவாவாகும். **மற்றொன்று**:- பொன்னாலை வரதராசப் பெருமாள் வித்தியாசாலை தரம் ஐந்தின் மாணவன் செல்வன் ஸ்ரீவிக்கினேஸ்வரன் உமாசுதன் அவர்களின் மிருதங்க அரங்கேற்றமும் எம்மால் மனங்கொள்ளப்பட வேண்டியதே. இது போன்றனவற்றைத் தட்டிக் கொடுத்து உற்சாகப்படுத்தப்பட வேண்டியதுமாகும். இந்த அரங்கேற்றம் நாம் அறிந்த வரையிலே மிகக் குறைந்த வயதில் நிகழ்ந்ததும் ஆகும். இவரை நெறிப்படுத்திய பெற்றோரும் சங்கீதரத்தினம் மா. சிதம்பர நாதன் அவர்களுக்கும் கலையின் பேரால் பாராட்டைத் தெரிவிக் கின்றோம்.

மூத்த மும்மணிகளின் சேவையையும் வளரும் பயிராக களத்தில் நிற்கும் செல்வனையும் 'கல்யாணி' வாயிலாக வாழ்த்தி வணங்குகின்றோம்.

இனியவற்றை இனங்காண்போமாக!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்

# "கலையும் அனுபவமும்"

திரு கனகசபாபதி நாகேஸ்வரன் M.A

தமிழர்தம் கலை வரலாறு மிகவும் நீண்டது. ஆங்கிலச் சிந்தனையும் புதிய கலைக் கோட்பாடுகளும் இன்று கலை பற்றிய பெறுமானங்களை அதிகரித்துள்ளனவெனினும் மானுட வளர்ச்சி வரலாற்றிலே சில அடிப்படை அம்சங்கள் இன்றும் கலை வளர்ச்சி யுடன் இணைந்தும் பிணைந்தும் காணப்படுகின்றன. உள்ளத்து உணர்வுக்கு விருந்தளிப்பதற்கு மட்டுமே கலையால் முடியும் என்ற நிலை அடிபட்டுப்போக, ஒரு வளர்ச்சி வரலாற்றையும் பண்பாட்டு முதன்மையையும் துலக்கும் கலைக் கோட்பாடு என்றும் நிலவுவ தையும் நாம் நோக்குவதற்குத் தவறக் கூடாது. செழுமை மிக்க கலையம்சங்களை நோக்கும் நிலமை தோன்ற வேண்டும். வெறும் வடிவம் மட்டும் செழுமையான கலை மரபைத் தரா. மாறாகப் பொருளாழம் கருதும் கலைக் கோட்பாடுகள் முன்னெடுக்கப்படல் வேண்டும். இந்த நோக்கு நிலை உலகிலே வழங்கும் எந்தக் கலைக்கும் பொருந்தும். என்றும் வாழும் மகோன்னதக் கலைகள் மனிதாயத்தின் மதிப்பினைப் பெற்றே வாழும்.

ஓவியம், சிற்பம், இசை, நடனம், நாடகம் என ஆய கலைகள் அறுபத்து நான்கும் நீண்ட நெருக்கமாகத் தமிழகத்தில் வானுற ஓங்கி வளர்ந்துள்ளன. புதிய பரிமாணங்கள், தோற்றப்பாடுகள் பழமைச் செழுமையின் பகைப்புலத்தில் நுழைந்து கலையின்பம் செய்தல் வேண்டும். மொழிவளம், இலக்கிய வளம், கலைவளம் என்பன பற்றிய நீள நினைந்து பார்க்கும் போக்கும் நோக்கும் வளர வேண்டும். அழகுக்கலைகள் எப்பொழுதும் நுட்பம் வாய்ந்தவை. அழகுக்கெனத் திருக்கோயில்களை எழுப்பினர். கட்டடக் கலையின் நுட்பம் மிகவும் வனப்பு மிக்கது. குடவரைக் கோயில்கள் எழுந்தன. இயற்கையின் துணையுடன் முதலிலே கலைப்படைப்புக்கள் தோற்றம் பெறலாயின. ஆடலும் பாடலும் நாளும் வளர்ந்தன. நல்ல கலைகள் பற்றித் திருமுறைகள் தித்திக்கப் பேசுகின்றன. திருவிளக்குகள், திருக் கதவங்கள், தேர்கள், நூற்றுக்கால், ஆயிரங்கால் மண்டபங்கள் ஆயகலைகளின் அழகிய அடையாளங்கள். காலத்தை வெல்லும் கலைச் செல்வங்களைக் கல்லிலும் செம்பிலும் கவினுற வடித்தனர்.

நமது வசதிக்காக மன்னராட்சிக் காலங்களை வைத்துக் கொண்டு கலை வரலாற்றையும் காண்போம். பல்லவ மன்னராட்சி, சோழப் பெருமன்னராட்சிக் காலம், பாண்டியர் காலம் என்று பாகுபடுத்தி ஆராயும் நெறி உண்டு. சோழர் கலைப்பாணி தனித் தன்மை பெற்றுத் திகழ்வது, செப்பு படிமங்களின் கலை அழகு கண்டவரைக் களிப்புக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்ளச் செய்யும் காவிரிக் கரையில் கண்ட கலை எழில் மிக்க செப்புப் படிவங்கள் ஒன்றா, இரண்டா, ஓராயிரமன்றோ? உயர்ந்து வளர்ந்த நாகரிகத்தின் ஒப்பற்ற அடையாளங்களாக அவை திகழ் கின்றன. அவை பரப்பும் கலை ஒளி மனித குலத்திற்குப் புதுமையையும் புத்துணர்ச்சியையும் என்றும் வழங்குகின்றன.

கலை வரலாற்றைத் திறம்பட எழுதியவர்க்குள் கலாயோகி ஆனந்தகென்றிஸ் குமாரசுவாமி அவர்களுக்குச் சிறப்பான இடமுண்டு. அவர் எழுதிய இந்திய இந்தோனேசியக் கலை வரலாறு (History of Indian and Indonesian ) கலை வரலாற்றாசிரியர்க்கு வழிகாட்டியாய் விளங்குகிறது.

"கல்" என்ற வேர்ச் சொல்லிருந்து தோன்றிய சொற்கள் பல. கல்வி, கலை, கற்பு என்பவை அவற்றுட் சில. கலை என்பது பன்மையில் செவிநுகர் இசையையும் கண் கண்டு களிக்கும் காட்சிப் பொருள்களையும் குறிப்பதாகும். செவிக்குணவாகும் இசையும் கண்ணுக்கு இன்பம் தரும் ஆடல், ஓவியம், சிற்பம் என்ற இவை போன்றவையும் நுண்கலைகளாகும். பொறிகளின் வழி கலைகளை நுகர்ந்தாலும் புலன்களுக்குள் உணர்வூட்டிக் கலை இன்பம் தருகிறது. உள்ளத்தில் அலைமோதும் கருத்துக்கள் செவிகேட்கக் கண்காணக் கலைகளாய் மிளிர்கின்றன.

கலை வாழ்க்கையுடன் ஒன்றியது. கலை ஒரு சிலர் கேட்பதற்கும் மற்றும் சிலர் பார்ப்பதற்கென்றும் எழுந்ததன்று. அது ஒரு பொதுச் சொத்து. கலைஞன் இல்லாத ஒன்றைப் படைப்பதில்லை முன்னமே உள்ள ஒன்றைக் கண்டுபிடிக்கிறான். கலை இல்லாத ஒன்றின் படைப்பன்று. "கலை இயற்கைப் பொருளன்று அது செயற்கை" என்கிறார் கலாயோகி ஆனந்த குமாரசுவாமி. ஜோன் ரஸ்கின் என்பார், "கலை விரவா உழைப்பு காட்டுமிராண்டித்தனம்" என்கிறார்.

உலகமதிப்புப் பெற்றமைவது கீழைத்தேசக்கலை தமிழ்நாடு இந்தியா கலைபண்பாட்டு வளர்ச்சியில் முதன்மை பெறும். தமிழ் நாட்டின் கலை சமயச் சார்புடையது. நாயன்மார்கள் புகழ்ந்த பாடல் பெற்ற தலங்களும் ஆழ்வார்கள் மங்களாசனம் செய்தருளிய திருப்பதிகளும் மாபெரும் கலைக் கருவூலங்களாய் இன்றும் திகழ்கின்றன. தமிழ்நாட்டுக் கலையின் உட்பொருள் சிறப்பாக அமைகின்றது. (Symilrtism in Art)

கலைப்பொருள்கள் வண்ணக் கலவைகளைக் கையாளும் முறையாகவோ, ஒலிகளை எழுப்பும் வகையாகவோ மரம், உலோகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகியவற்றைப் பயன்படுத்திச் சமைக்கும் உருவங்களாகவோ மனத்துக்கு உகந்ததாகலாம். அறிவு முதிர்ச்சியின் விளைவு கலை எனலாம். கலைஞன் மற்றைய மனிதர்களுக்கு மாறான மனிதனல்லன். ஏனெனில் ஒவ்வொரு மனிதனுமே ஒரு சிறப்பான குணம் படைத்த கலைஞன். அவ்வாறில்லையெனில் அவன் மனிதனில்லை.

உள்ளுணர்வால் உந்தப்பட்டவைகளைக் கலைஞன் படைக்கிறான். இக்கருத்துக்கள் எவருடைய உரிமையும் இல்லை. அவை மனித இனத்தின் பொதுச்சொத்து.

புறக்கண் கொண்டு காண்பதை அகக்கண்ணால் கண்டு கலைஞன் ஓவியமாய்த் தீட்டுகிறான் அல்லது சிற்பமாகச் செதுக்கு கிறான். இயற்கையின் கொள்ளை அழகைக் காணக் கண் கோடி வேண்டும். என்றாலும் அவ்வழகைத் தான் நுகர்ந்தவழி கலைஞன் தன் மனநிறைவுக்கேற்ப வெளிப்படுத்துகிறான்.

கிரேக்கக் கலையில் அழகு இயற்கையுடன் போட்டியிடும். கிறிஸ்தவக் கலையில் அன்பின் கனிவு தோன்றும். தமிழ்க்கலையில் கலைஞன் தன்னை வழிபடுபவனாய் கருதி இறைவனுக்குக் காணிக்கை செலுத்தி அவன் பேராற்றலுக்குத் தலைவணங்கி அஞ்சலி செலுத்துகிறான். தன்னை மறந்த நிலையிலிருந்து அழகைக் கலைஞன் வழிபடுகிறான். சமயம், மரபு என்பவைகளைச் சிக்கெனப் பிடித்து மக்கள் மனத்துள் எழும் உணர்ச்சிகளை வெளிப்படுத்தும் கருவியாய்க் கலைஞன் விளங்குகிறான். தமிழ்நாட்டுக் கலைஞன் வழிச் சமூகம் தன்னை வெளிப்படுத்திக் கொள்கிறது என்று சொன்னால் அது மிகைப் படுத்திக் கூறியதன்று.

'அழகு' என்பது பற்றி நிலவும் கருத்து எவ்விதமாயினும் கலைஞன் அழகைக் காண்பது உள்ளத்தெழும் உணர்ச்சியைப் பொறுத்தது. அநுபவத்தின் பல தோற்றங்களே "நவரசங்கள்" ஒன்பது சுவைகள் அல்லது சாறுகள். ரசம் அல்லது சாறு சுவைப்படுகிறது. அழகு உணரப்படுகிறது. அழகு ஒருவனுடைய விருப்பத்தைப் பொறுத்ததன்று. இனபத்தைத் தருகிறதோ வெறுப்பைக் கிளறுகிறதோ, உயர்ந்ததோ, தாழ்ந்ததோ, கொடியதோ அன்றி அன்பைப் பொழிகிறதோ புரியாததோ அன்றிச் செம்மையானதோ அல்லது கற்பனையோ மனிதன் நெஞ்சில் சுவையை எழுப்பாத பொருளே இல்லையெனலாம்.

'சமயம்' கலை எனபவை ஒரே அநுபவத்தின் இரு பெயர்களாகும். உளதாகி ஒன்றுபடும் உள்ளுணர்வு. வெளிநாட்ட வர்க்கும் இன்று இக்கருத்து உடன்பாடானதே. காதல் எவ்வாறு காதலன் நேரிடை அனுபவமோ, உண்மை எவ்வாறு தத்துவஞானியின் நேரிடை அநுபவமோ அவ்வாறே அழகென்பதும் கலைஞனுடைய நேரிடை அநுபவம். கையாளும் கலைப்பாணி அநுபவத்தைத் துலக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரங்க ஆடை

கலைஞான கேசரி
**V. J கொன்ஸ்ரன்ரைன் J.P**

எழுத்துப் பிரதி ஒன்றிற்கு நிதர்சனமான அரங்க வடிவம் கொடுக்கப்படும் போது "ஆடை" நடிகனின் ஆற்றுகைப் பங்காளனாகி விடுகின்றது. ஆடையும் நடிகனும் ஒன்றிணைந்தே நடிக்கின்றன. ஒன்றையொன்று பிரிந்து எதையும் சாதிக்க முடியாது. அரங்கில் ஆடை நடிகனின் நண்பன், அவனுடைய சக்தி வாய்ந்த துணை, அவனுடைய ஒரு அங்கம் என்பதை யாருமே மறுக்க முடியாது.

அரங்கில் ஆடை வெறுமனே அழகையும், ஒயிலையும் (Style) மட்டுமே வெளிப்படுத்துவதுடன் நின்று விடுவதில்லை. குறிப்பிட்ட பாத்திரம் சம்பந்தமான பல்வேறு தகவல்களையும் அது வெளிப்படுத்துகின்றது. அந்தப் பாத்திரம் ஆணா அல்லது பெண்ணா என்பதை உறுதிப்படுத்துவதுடன் அப்பாத்திரத்தின் சமூக அந்தஸ்து, தொழில் அப்பாத்திரம் எத்தகைய பகைப்புலத்தில் காட்சியளிக்கின்றது
(உ-ம்:- வீட்டிலா, விசேடமான ஒரு நிகழ்விலா அல்லது தொழில் புரியும் இடத்திலா) அப்பாத்திரத்தின் தன்மை
(உ-ம்:- அலங்கார விரும்பியா அல்லது சுதந்திரமான போக்கு உடையதா) சக பாத்திரங்களுடனான உறவு என்ன
(உ-ம்:- அரசன், மந்திரி, சேனாதிபதி) அப்பாத்திரத்தின் காலம்
(உ-ம்:- 10ம் நூற்றாண்டா அல்லது 18ம் நூற்றாண்டா) போன்ற பல்வேறு சங்கதிகளை, வார்த்தைகள் எதுவுமின்றியே பார்வையாளனுக்குச் சொல்லி விடுகின்றது.

நாம் அணிகின்ற ஆடை ஒரு மனிதனின் தன்மையை விபரிக்கின்றது. அரங்கில் தோன்றும் நடிகன் தான் ஏற்றுள்ள பாத்திரம் என்ன என்பதைத் தான் அணிந்துள்ள ஆடையின் மூலமே பார்வையாளனுக்கு முதலில் அறிமுகம் செய்கின்றான். அவன் அணிந்துள்ள ஆடை அது தைக்கப்பட்டுள்ள துணியைவிட சிறப்பான அம்சங்களைக் கொண்டது. அந்த ஆடை அவனைக் குறிப்பிட்ட பாத்திரமாகப் பார்வையாளனின் முன் நிறுத்துகின்றது. ஆடை அணியப் பெற்றதும் நடிகனின் உணர்வுகள் அவன் ஏற்றுள்ள பாத்திரத்தின் தன்மையை அவனுடைய படைப்பாற்றலின் திறனுக்கேற்ற அளவில் அவனுள் உற்பவிக்கின்றது. அவ்வேளையில் நடிகன் பாத்திரமாகிவிடுகின்றான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு பாத்திரத்தின் முழுமையான வெளிப்பாட்டிற்குத் தேவைப் படும் மற்றைய அம்சங்களைட்போல் நடிகனுக்கு ஆடை மிகவும் அவசியமானதொன்றாகும். அது வெறுமனே பாத்திரத்தைச் சித்தரிப்பது மட்டுமல்லாது அந்த நடிகனின் பாங்கிலும் (Posture) அசைவிலும் (Movement) குண இயல்பிலும் (Mood) தாக்கங்களை ஏற்படுத்திப் பாத்திரத்தின் தன்மையை துல்லியமாக விளங்கிக் கொள்ள வைக்கின்றது. நடிகன் ஆடை அணிந்து கொள்வதன் மூலம் தான் ஏற்றுக் கொண்டுள்ள பாத்திரத்தின் ஆளுமையை (Personality), சூழலை (Situation) நன்கு பிரதிபலிப்பதோடு அதன் மூலம் தன்னுள் எழுப்பப்படும் அக உணர்வுகளின் விளைவுகளை வெளிப்படுத்துவதற்கு அவன் நன்கு கற்றுக் கொள்ள வேண்டும். அரங்கில் கட்புல அநுபவம் (Visual Experience) என்பது மிகவும் காத்திரமானதொன்றாகும். அதன் சக்தியும், பெறுமதியும் எல்லையற்றவை. அது நடிகனையும் பார்வை யாளனையும் பாதிப்புக்குள்ளாக்க வல்லது. தகுதியானதும் பொருத்த மானதுமான ஆடைகளைச் சிறப்பான முறையில் தெரிவு செய்வதன் மூலம் நடிகனிடம் உள்ள ஆற்றலை உச்ச வெளிப்பாட்டுக்குக் கொண்டு வருவதற்கு நாம் துணை புரிய முடியும்.

நடிகனுக்கும் ஆடைக்கும் உள்ள உறவுபற்றியும், தேர்ந் தெடுக்கப்பட்ட அந்த ஆடை எந்த அளவுக்கு நடிகனின் ஆற்று கைக்குத் துணைபுரியும் என்பது பற்றியும் நாம் நன்கு உணர்ந்து கொள்ள வேண்டியது மிகவும் அவசியமாகும்.

நாளாந்த வாழ்வில் ஆழ் மனதிலுள்ள நமது பார்வையின் திருப்திக்கேற்பவே நாமணிவதற்கு ஆடைகளைத் தெரிவு செய்கின் றோம். ஒருவரின் உளவியல் பண்புக்கேற்ப ஆடைகள் வெளிப் படுத்தும் விளைவுகள் எல்லையற்றவை. விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொள்ளும் வீரர்கள், பொது மேடையில் தோன்றும் அரசியல் வாதிகள், பலி பீடத்தில் நிற்கும் குருக்கள், மணமேடையில் அமர்ந் திருக்கும் தம்பதிகள், அலுவலகங்களில் தொழில் புரிவோர், காவல் துறையினர், தொழிற்சாலைகளில் பணிபுரிவோர் மற்றும் பல்வேறு பணிகளில் ஈடுபடுவோரை நாம் கூர்ந்து அவதானிப்போமேயானால் அவர்கள் அணிகின்ற ஆடைகள், காலணிகள் மற்றும் அணிகலங்கள் யாவும் வேறுபட்டதாகவும் அவரவர் பணிகளைச் செய்வதற்கு வசதியாகவும் இருப்பதைக் காண முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரங்கம் ஒரு மாயாஜால இடம் போன்றது. அங்கே நடிகன் ஆடையை அணிந்து கொண்டு தான் ஏற்றுக் கொண்ட பாத்திரமாக தான் மாறிவிட்டதாக தன்னை நம்ப வைத்துக் கொணடு, பார்வை யாளனையும் தன் நடிப்பு நிஜமானது என்று ஏற்றுக் கொள்ள வைக் கின்றான். ஆடையுடன் ஒப்பனை, சிகை அலங்காரம் (Hair Style) அணிகலன்கள் (Accessories) யாவும் ஒரு நடிகனுக்குத் தன் படைப் பாற்றலை விபரித்து வெளிப்படுத்துவதற்கு உந்து சக்திகளாக அமைகின்றன.

ஒரு ஓவியன் தன் கலைப்படைப்பினை வெளிப்படுத்துவதற்கு தூரிகையையும் வர்ணங்களையும் பயன்படுத்துவது போல் ஒரு நடிகன் நாடகப் பிரதியை வியாக்கியானம் செய்வதற்குத் தன் உடலையே கருவியாகப் பயன்படுத்துகின்றான். அவன் அணிந்துள்ள ஆடை அவன் உடலின் ஒரு அங்கமாகிவிடுகின்றது. ஆடை அணியப் பெற்றதும் அவன் வேற்று ஒருவனாக மாற்றம் கொள்கின்றான். அவன் அணிந்திருப்பது வரலாற்றுக்கால ஆடையாக இருந்தால் பல நூற்றாண்டுகளுக்கு முன்னால் அவன் தூக்கிச் செல்லப் பட்டு விடுகின்றான். அப்போதைய காலத்தைக் காட்டி நிற்கும் அவன் தன் அசைவுகள் நிலைகள் மூலம் அப்போதைய சூழல் எப்படியிருக்கும் என்ற ஒரு அபிப்பிராயத்தை உண்டு பண்ணி பார்வையாளனை நம்பவைத்து விடுகின்றான்.

ஒரு நடிகனின் உச்சமான கலைத்துவம் என்பது, தான் நடிகன் அல்ல என்று பார்வையாளனை நம்பச் செய்வதுதான். தான் அணிந்துள்ள ஆடையின் மூலம் தான் நடிகன் அல்ல என்று தன்னைத் தானே நம்பவைத்துக் கொண்டு அந்த ஆடையின் துணையுடன் தான் ஏற்றுள்ள பாத்திரத்தின் தன்மை, வாழ்க்கைமுறை, பண்புகள் போன்ற பல விடயங்களை அவன் பிரசவிக்கின்றான். இதன் காரணமாக அவன் அணிந்துள்ள ஆடை நம்பகத்தன்மையை வெளிப்படுத்துவதாக இருக்க வேண்டியது அவசியமாகும்.. நடிகனின் திருப்திக்கேற்றவாறு அவன் அணிந்துள்ள ஆடை அமையும் போது தான் அவனுள் இருக்கும் அவனது படைப்பாற்றல் மிக வேகமாக இயங்கத் தொடங்கும்.

அரங்கில் ஆடை நடிகனுக்கு உதவி புரிவதாயிருக்க வேண்டுமே தவிர அசௌகரியமாக இருக்கக்கூடாது. அவனது ஆடை சாதாரணமாகத் தான் அணிகின்ற ஆடைதான் என்ற உணர்வினை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாநகர நூலக சேவை யாழ்ப்பாணம்.



ஏற்படுத்த வேண்டும். அத்துடன் அவன் அந்த ஆடையுடன் பொருத்த மான முறையில் நிற்க, நடக்க, இருக்கக் கற்றுக் கொள்ளவதோடு அந்த ஆடையின் துணையுடன் தான் ஏற்றிருக்கும் பாத்திரத்தின் தன்மையை சிறப்பித்துக் காட்டும் வகையில் அதில் நாடகத் தன்மையை (Daramatic Effect) ஏற்படுத்தத் தெரிந்து கொள்ள வேண்டும். ஒரு நடிகன் தான் அணிந்துள்ள ஆடையுடன் எவ்வளவு தூரம் அன்னியோன்னியம் கொள்கிறானோ அந்த அளவுக்கு தனது பாத்திரத்தை உள்வாங்கி ஆழமான உணர்வுகளை வெளிப்படுத்த முடியும்.

அரங்கில் ஆடை, ஒரு நடிகன் ஏற்றுள்ள பாத்திரத்தை மேம்படுத்துவதாக அமைய வேண்டுமே தவிர அப்பாத்திரத்தின் கவனத்தைத் திசை திருப்புவதாக அமையக் கூடாது. அரங்கில் நடிப் பவர்களுக்கும், நடனம் புரிபவர்களுக்கும் அவர்கள் அணிகின்ற ஆடை அவர்களின் சுதந்திரமான மேடை அசைவுகளுக்கு ஏற்றவாறு வசதியாக அமைந்திருக்க வேண்டியது மிகவும் அவசியமாகும். அதே வேளையில் அந்த ஆடை அவர்கள் ஏற்றுள்ள பாத்திரத்திற்கும் பொருத்தமானதா கவும் அமைந்திருக்க வேண்டும்.

வர்ணமும், துணியும் ஒன்றுடன் ஒன்று தொடர்புடையவை யாகும். நடிகன், பார்வையாளன் ஆகியோர் மீதான வர்ணத்தின் பாதிப்பு பல் பரிமாணங்கள் கொண்டவை. குழந்தையாய்ப் பிறந்தவுடன் நாம் முதலில் கண்டு கொள்வது வெளிச்சத்தை மட்டுமே. தொடர்ந்து அறிவது வர்ணங்களை வெவ்வேறு வர்ணங்கள் நம் உணர்வுகளில் ஏற்படுத்தும் பாதிப்புக்கள் நமது வாழ்நாள் முழுவதும் தொடர்கின்றன.

கிறீஸ்தவர்கள் குழந்தைகளுக்கு திருமுழுக்கு எனும் சடங் கினை நிறைவேற்றும் போது தூய்மையையும், தீங்கின்மையையும் வெளிப்படுத்தும் வெள்ளை நிற ஆடைகளையே அணிவிக்கின்றனர். இளஞ்சிவப்பு (Pink) வெளிர்நீலம் ஆகிய வர்ணங்கள் மனத் தூய்மை யையும், இளமையையும் வெளிப்படுத்தி நிற்கின்றன. மங்களகரமான நிகழ்வுகளில் மகிழ்வினைத்தரும் மஞ்சள் நிறம், திருமணத்தின் போது மணப்பெண்ணின் புனிதத்தை வெளிப்படுத்த வெள்ளை நிறம், வயது ஏற ஏற வறுமையை வெளிப்படுத்தும் கடுஞ் சிவப்பு நிறம், அறிவை புலப்படுத்தும் ஊதா நிறம், அதிகாரத்தை வெளிக்காட்டும் கறுப்பு நிறம், மனிதனின் இறுதி யாத்திரையின் போது துக்கத்தை காட்டும் கறுப்பு நிறம் இப்படியாக களங்கமற்ற வெள்ளை நிறத்துடன் ஆரம்பமாகும் நமது வாழ்வு இறுதியாக கறுப்பு நிறத்தில் நிறைவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெறும் வரை நமது வாழ்நாள் முழுவதும் வர்ணங்களும் அவற்றின் தாக்கங்களும் அவை நம்மில் ஏற்படுத்தும் கிளர்ச்சிகளும் தொடர்ந்து கொண்டே இருக்கின்றன. தனியான சில வர்ணங்கள் வித்தியாசமான உணர்வுகளை வெளிக்கொணர ஏதுவாக அமைகின்றன. உதாரணமாக மஞ்சள் நிறம் பிரகாசத்தின் அடையாளமாகவும், மகிழ்ச்சியின் வெளிப் பாடாகவும் அமைகின்றது. அதே வேளையில் சிவப்பு நிறம் நம்முன் அச்சத்தையும் திகிலையும், துரோகத்தனத்தையும் உற்பவிக்கின்றது. ஊதா நிறம் இராஜத்துவத்தை வெளிப்படுத்தி நிற்கின்றது. (நமது கூத்து அரங்குகளில் அரச பாத்திரமேற்பவர்கள் ஊதா நிறத்தினாலான ஆடைகள் அணிவதைக் காணமுடியும்)

வர்ணங்கள் வெறுமனே நம் கண்களுடன் தொடர்பு கொள் வதில்லை. அவற்றிற்குச் சிறப்பான ஒலிகளை வெளிப்படுத்தும் ஆற்றலும் உண்டு. உதாரணமாக சிவப்பு நிறம் அழுகை ஒலியையும் சாம்பல் நிறம் மிக ரகஸ்யமான ஒலியையும் வெளிப்படுத்துவது போன்ற தன்மையை நாம் உணர முடியும்.

வர்ணங்கள் இசைக்க வல்லன, நடிக்க வல்லன, பாட வல்லன. நாடகப் பிரதியில் காணப்படும் கதாசிரியனின் எண்ணங்களை அரங்கில் காண்பியங்களாக்கும் போது (Visual Form) வர்ணங்கள் தான் அவன் வார்த்தைகளில் வெளிப்படுத்துகின்ற உணர்வுகளை விபரணமாக்கி கொடுப்பதோடு நடிகன் மீதும் பார்வையாளன் மீதும் எதிர்த்தாக்கங் களை ஏற்படுத்துகின்றது. வர்ணங்கள் பல்வேறு உணர்வுகளை வெளிப் படுத்தும். புறநிலைத் தன்மைகளை(Mood) தோற்றுவிப்பதோடு சம்பந்தப் பட்ட காட்சியில் தோற்றமளிக்கும் பாத்திரத்தின் நடிப்பினையும் மேம் படுத்துவதற்குத் துணைபுரிகின்றது.

ஒரு நாடகத்திற்கான ஆடைகளை நாம் தேர்ந்தெடுக்கும் போது மிக அவதானமாகச் செயல்பட வேண்டும். நாடகப் பிரதியைப் பலமுறை படித்துத் தெளிவு பெறுவதுடன் கதாசிரியர், இயக்குனர், ஒளி அமைப்பாளர், ஒப்பனையாளர், அரங்க வடிவமைப்பாளர், மேடை நிர்வாகி ஆகியோருடன் ஆரோக்கியமான முறையில் கலந்துரையாடி ஒவ்வொரு காட்சியிலும் பாவிக்கப்படப் போகும் அரங்கப் பின்னனி என்ன, பாத்திரங்கள் அணியப்போகும் ஆடைகளின் வடிவமைப்பு என்ன, வர்ணங்கள் என்ன, ஒப்பனை எத்தகையது, வெளிப்படும் ஒளியின் தன்மை, அவை வர்ண ஒளியூட்டலாயின் எத்தகைய வர்ணங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பது பற்றி முன்னதாகவே அறிந்து அதற்கேற்ப அரங்கப் பின்னனியின் நிறங்கள் எவ்வாறு அமைய வேண்டும் என்பதை முன்னதாகவே தீர்மானித்துக் கொள்ள வேண்டும். ஏனெனில் அரங்கப் பின்னனியில் பாவிக்கப்படும் நிறங்கள், நடிகர்களின் ஆடைகளின் நிறங்கள் மற்றும் ஒப்பனை யாவும் ஆற்றுகையின் போது ஒளி அமைப்பினால் பாய்ச்சப் படப் போகும் ஒளியின் தன்மைக்கேற்ப அவற்றின் நிறங்கள் மாற்றம் பெறும் என்ற கருத்தினை நாம் எண்ணத்தில் கொள்ள வேண்டும். இதனைத் தீர்மானிப்பதற்கு நிறச்சேர்க்கைகள் பற்றிய அறிவு நமக்கு அவசியமாகும்.. அப்போதுதான் நாம் எதிர்பார்க்கின்ற விளைவுகளை ஆற்றகையின் போது அரங்கில் தோற்றுவிக்கமுடியும்.. அதேவேளையில் ஆடைகளைத் தயாரிப்பதற்குப் பொருத்தமான மூலப் பொருட்களையும் தேர்ந்தெடுக்க வேண்டும். முன்னரைப் போலல்லாது இன்று பல்வேறு வகையான துணிகள் பல்வேறு ரகங்களில் சந்தையில் ஏராளமாக கிடைக்கின்றன. மிகவும் பளபளப்பான வர்ணங்களைக் கொண்டு நாடக வடிவமைப்பில் உணர்வுகளுக்குப் பொருத்தமற்ற துணிகளினால் அமைக்கப்படும் ஆடைகளினால் ஆற்றுகை மழுங்கடிக்கப்பட்டுவிடும் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது.

நாடகப் பாத்திரம் கிடைத்தவுடன் நடிகனுக்கு ஆடை கிடைப்பதில்லை. அது பல சமயங்களில் இறுதி ஒத்திகை பார்க்கும் போதுதான் கிடைக்கக் கூடியதாயிருக்கும். சில சமயங்களில் ஆற்றுகையின் போதே கிடைக்கும். ஆகவே நடிகன் தனக்குத் தரப்பட்ட பாத்திரத்தினை மேம்படுத்துவதற்கு ஆய்வினை மேற்கொள்ள வேண்டும். இத்தகைய ஆய்வினை மேற்கொள்வதற்கு நாம் மூன்று ஊற்றுக்களைப் (Source) பயன்படுத்தலாம்.

**1) தொல்பொருள் காட்சிச்சாலை (Museum)**

வரலாற்றுப் பாத்திரமாயின் கதையில் சொல்லப்பட்ட காலத்திற்குரித்தான உடை அமைப்பு, அக்காலத்தவர்கள் எந்த விதமாக அமர்ந்திருந்தார்கள், நின்றார்கள் என்பதை பழைய ஓவியங்களிலிருந்தும், படங்களிலிருந்தும், சிற்பங்களிலிருந்தும் நுணுக்கமாக அவதானித்துக் கொள்ள வேண்டும். அத்துடன் அக்காலத்தவர் அணிந்த அணிகலன்கள், முடிகள், தொப்பிகள், கையுறைகள் முதலியவற்றை நன்கு அவதானித்து வைத்துக் கொள்ள வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**2) நூல் நிலையங்கள் (Libraries)**

தரப்பட்ட பாத்திரத்தின் காலத்தையறிந்து அது தொடர்பான தகவல்களைக் குறிப்பெடுத்துக் கொள்ள வேண்டும். அத்துடன் அக்காலத்தய ஓவியங்கள், புகைப்படங்கள் ஆகிய வற்றை நன்கு அவதானித்து அந்த ஆடைகளின் வடிவமைப்புக்கள், வர்ணங்கள், மற்றும் அணிகலன்கள் என்பவற்றை நன்கு மனத்தில் இருத்தி அவற்றை நாம் அணியும் போது எப்படியான உணர்வுகள் நமக்குத் தோன்றும் என்பதை நமது கற்பனைக் குதிரையைத் தட்டிவிட்டு நமக்குள் அந்தப் பாத்திரத்தைப் படைக்க வேண்டும். பழைய சஞ்சிகைகள், புதினத் தாள்கள் நமக்கு நிறையத் தகவல்களை வழங்கும்.

***3) சினிமாப்படங்கள் / தொலைக்காட்சி***

பிரபலமான திரைப்படக் கம்பனிகள் பல வருடங்களாக ஆய்வுகளை மேற்கொண்டு பிரமாண்டமான திரைப்படங்களைத் தயாரித்துள்ளார்கள். அத்துடன் நிறைய வீடியோப் படங்களும் கிடைக்கக் கூடியதாயுள்ளது. நமது பாத்திரம் சம்பந்தமான படங்களைப் பார்ப்பதன் மூலம் அப்பாத்திரங்கள் பற்றிய கட்புல அநுபவம் நமக்கு இலகுவாகக் கிடைக்கும். அத்தகைய பாத்திரங்களின் ஆடை அமைப்பு, அணிகலன்கள், அசைவுகள் நிலைகள் சம்பிரதாயங்கள் ஆகியவற்றை அவதானித்துக் கொள்வதன் மூலம் நமக்குத் தரப்பட்ட பாத்திரத்தை நமது படைப்பாற்றலுக்கேற்ற விதத்தில் நாம் மேம்படுத்திக் கொள்ள முடியும்.

மேடையில் தோன்றும் நடிகனுக்குத் தான் . பொருத்தமான முறையில் ஆடை அணிந்துள்ளேன் என்ற எண்ணம் மிகவும் திருப்தி யாக இருக்கும் போது அந்த நடிகனுக்குத் தன்னை அறியாமலேயே அசாத்தியமான தென்பு ஏற்பட்டுவிடும். அதன் பிறகு அவனது படைப்பாற்றல் அதீத கூர்மையடையும் என்பதில் சந்தேகமே இல்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செர்ரிப்பழத் தோட்டம்

(தொடர்ச்சி)

அன்ரன் செஹோவ் ருஷ்ய மொழியில் எழுதியது.
ஆங்கில மொழி மூலம்:- எலிசவெதா ஃபென்

தமிழில் திருமதி S. கல்யாணசுந்தரேசன்
(B. Sc. Dip-in-Ed M.A)
(ஓய்வு பெற்ற பிரதிக் கல்விப்பணிப்பாளர், யாழ் கல்விக்கோட்டம்)

## அங்கம் IV

*[மேடை அமைப்பு அங்கம் I இனது போன்றது. சுவர்களில் படங்கள் தொங்கவில்லை. யன்னல்களில் திரைச் சேலைகள் இல்லை. மிகுதியாகவிருந்த, மிகவும் குறைந்தளவு தளபாடங்கள் ஒரு மூலையில் விற்பனைக்குரியவை போன்று குவிக்கப்பட்டுள்ளது. அங்கே துன்புறுத்தும் உணர்ச்சிக்குரிய ஒரு வெறுமை. மேடையின் பின்புறத்தில் கதவின் அருகே உடுப்புப் பெட்டிகள். பிரயாணச் சிப்பங்கள் போன்றவை ஒரு பிரயாணத்திற்குரிய ஆயத்தங்களைக் காட்டுவது போன்று குவிக்கப்பட்டுள்ளன. திறந்து காணப்படும் இடது பக்கத்துக் கதவினூடே அன்யா, வார்யா அவர்களின் குரல்கள் கேட்கின்றன. லொபாஹின் காத்துக்கொண்டு நிற்கிறான். யாஷா மது நிரம்பிய கண்ணாடிக் குவளைகள் கொண்ட ஒரு தட்டுடன் காணப்படுகின்றான். மண்டபத்தில் யெப்பிஹொடோவ் ஒரு பெரிய பெட்டியைக் கட்டுகின்றான். காட்சியின் பின்புறத்தில் எங்கோ இருந்து குரல்களின் மெதுவான இரைச்சல் ஒலி கேட்கின்றது. கிராமத்து மக்கள் பிரியாவிடை பெறும் பொருட்டு அங்கே பிரசன்னமாகியுள்ளனர். "நன்றி நண்பர்களே, நன்றி" என்று கூறும் கயேவ்வின் குரல் அங்கே கேட்கின்றது]*

**யாஷா:** கிராமத்து மக்கள் பிரியாவிடைகூற வந்துள்ளனர். யேமோலாய் அலெக்சீச் எனது கருத்துப்படி அவர்கள் இரக்க சிந்தையுள்ள மனிதர்கள் ஆனால் அவர்கள் விளக்கம் குறைவானவர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*(அந்த மெல்லியஇரைச்சல் ஒலி குறைகின்றது. லூபோவ் அன்திரீவ்னாவும், கயேவ்வும் மண்டபத்திலிருந்து பிரவேசிக் கின்றனர். லூபோவ் அன்திரீவ்னா அழவில்லை ஆனால் அவருடைய முகம் வெளிறியும் நடுக்கமுடையதாகவும் காணப் படுகின்றது. அவர் கதைக்க முடியாது காணப்படுகின்றார்)*

**கயேவ்:** நீர் உமது பணப்பையை அவர்களிடம் கொடுத்துவிட்டீர் லூபா. நீர் அப்படிச் செய்திருக்கக் கூடாது. உண்மையில் நீர் செய்திருக்கக் கூடாது.

**லூபோவ் அன்திரீவ்னா:** என்னால் அப்படிச் செய்யாமல் இருக்க முடியவில்லை. என்னால் முடியவில்லை! *(இருவரும் வெளியேறு கின்றனர்.)*

**லொபாஹின்:** *(கதவினூடே அவர்களின் பின்னே கூப்பிடுகின்றான்)* தயவு செய்து சிறிதளவு பிரான்ஸ் மது அருந்துங்கள். தயவு செய்து நீங்கள் செல்ல முன்பு ஒரு சிறிதளவு அருந்துங்கள். நான் பட்டணத்திலிருந்து அவைகளைக் கொண்டுவர நினைக்கவில்லை. புகையிரத நிலையத்தில் என்னால் ஒரு போத்தல் தான் பெற்றுக் கொள்ள முடிந்தது. தயவு செய்து கொஞ்சம் அருந்துங்கள். *(ஒரு தரிப்பு)* ஒன்றும் அருந்தமாட்டீர்களா சீமாட்டிகளே, சீமான்களே? (கதவினருகே இருந்து வெளியே நடக்கின்றான்) எனக்குத் தெரிந்திருந்தால் நான் ஒன்றுமே வாங்கி இருக்க மாட்டேன்....... அப்போ நானும் எதுவுமே குடிக்க மாட்டேன். *(யாஷா தட்டினைக் கவனமாக ஒரு நாற்காலியில் வைக்கிறான்)* யாஷா ஒருவரும் பருகாவிட்டால் நீர் பருகும்.

**யாஷா:** இங்கே இது பிரயாணிகளின் நலனுக்காக! இது இங்கே இருக்கப் போகும் உமது நலனுக்காக. *(பருகுகின்றான்)* இந்த பிரான்ஸ் மதுவானது உண்மையான மதுவல்ல என்று எனக்குச் சொல்ல முடியும்.

**லொபாஹின்:** ஒரு போத்தல் எட்டு ரூபிள்கள். *(ஒரு தரிப்பு)* இங்கு பேய்க் குளிராக இருக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**யாஷா:** நாங்கள் போகிறோம் என்ற காரணத்தால் இன்று அடுப்புகள் பற்றவைக்கப்படவில்லை. பரவாயில்லை. *(சிரிக்கின்றான்)*

**லொபாஹின்:** ஏன் சிரிக்கின்றீர்?

**யாஷா:** ஏனெனில் நான் மிகவும் சந்தோஷமாக இருக்கின்றேன்.

**லொபாஹின்:** இப்பொழுது ஒக்ரோபர் மாதம். இன்னும் கோடை காலம் போன்று வெய்யிலாகவும் அமைதியாகவும் இருக்கின்றது. நல்ல விஸ்தரிப்புக்குரிய கால நிலை. *(தனது கைக்கடிகாரத்தைப் பார்த்துப் பின்பு கதவை நோக்குகின்றான்.)* சீமான்களே, சீமாட்டிகளே புகையிரதம் புறப்படுவதற்கு இன்னும் நாற்பத்தாறு நிமிடங்களே உள்ளன என்பதை மறவாதீர். அதன் அர்த்தம் என்னவென்றால் இன்னும் இருபது நிமிடத்தில் நாம் புறப்பட வேண்டும். விரையுங்கள்.

*(ட்றொபிமோவ் ஒரு மேலங்கியை அணிந்தவாறு வெளியே இருந்து உள்ளே வருகின்றான்.)*

**ட்ரொபிமோவ்:** நாம் புறப்பட நேரமாகின்றது என்று நான் நினைக்கின்றேன் குதிரைகள் வாயிலில் ஆயத்தமாக நிற்கின்றன. எனது கையுறை எங்கே என்று கடவுளுக்குத்தான் தெரியும். அவைகள் மறைந்து விட்டன. *(கதவினூடே கூப்பிடுகின்றான்)* அன்யா, எனது கையுறைகள் இங்கே இல்லை. அவைகளை என்னால் காண முடியவில்லை.

**லொபாஹின்:** நான் "கார்க்கோவ்" இற்குப் புறப்பட வேண்டும். நான் உங்கள் புகை வண்டியிலேயே உங்களுடன் பிரயாணம் செய்வேன். குளிர்காலம் முழுவதும் "கார்க்கோவ்" இல் நான் நிற்க வேண்டும். இவ்விடத்தில் அதிக காலம் தரித்து விட்டேன். வேலை செய்யாது இருத்தல் சித்திரவதையாக இருக்கிறது. வேலை செய்யாது வெறுமனே இருக்க என்னால் முடியாது. என்னுடைய கைகளுடன் என்ன வேலை செய்வதென்றே தெரியவில்லை. ஊனமுற்று இருப்பது போலவும் அபூர்வமாக இருப்பது போலவும் எனக்குச் சொந்தமில்லாது இருப்பது போலவும் அவைகள் உணர்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ட்ரொரி விமோவ்:** நாங்கள் விரைவாகப் போய்விடுவோம். அப்பொழுது நீர் உமது உபயோகமான உழைப்பைத் திரும்பத் தொடங்கலாம்.

**லொபாஹின்:** ஒரு சிறிதளவு மது எடுங்கள். அதைச் செய்யுங்கள்

**ட்ரொரி விமோவ்:** இல்லை நன்றி.

**லொபாஹின்:** அப்போ நீர் மொஸ்கோவிற்குப் போகிறீரா?

**ட்ரொரி விமோவ்:** ஆம், அவர்களை நான் பட்டனத்திற்கு அனுப்பிவிட்டு, நான் அடுத்துநாள் மொஸ்கோவிற்குப் புறப்படுவேன்.

**லொபாஹின்:** நல்லது, நல்லது...... உமது பேராசிரியர்கள் தமது விரிவுரைகளை பிற்போட்டு உமது வருகைக்காக காத்திருக்கிறார்கள் என நான் எதிர்பார்க்கிறேன்!

**ட்ரொரி விமோவ்:** இது உமக்குத் தேவையற்ற வார்த்தைகள்

**லொபாஹின்:** எத்தனை வருடமாக நீர் பல்கலைக்கழகத்தில் படிக்கின்றீர்?

**ட்ரொரிவிமோவ்:** நீர் ஏதாவது புதிய விடயங்களைப்பற்றிச் சிந்தியும். அது மிகவும் பழைய, ஆறிப்போன விடயம் *(கையுறைகளைத் தேடுகிறான். பேச்சுக்கிடையிலே)* நாம் இனிமேல் ஒருவரை ஒருவர் சந்திக்க முடியாதாகையால், பிரியாவிடையாக நான் உமக்குச் சில புத்திமதிகளைக் கூறிவைக்க விரும்புகின்றேன். கைகாட்டிக் கதைப்பதை நிறுத்தும். மிகைப் படுத்திக் கூறும் சைகைகளிலிருந்தும் உம்மை விடுவித்துக் கொள்ளும். ஆம் உமது இந்தப் பேச்சுக்களெல்லாம் அதாவது வீடுகள் கட்டுவது பற்றியும் கோடைக்கால வாசஸ்தலங்கள் பற்றிய எதிர்பார்ப்புக்களும், ஜோஸ்யங்களும் - இவைகள் எல்லாம் மிகைப்படுத்திக் கூறும் சாடைகளே..... இவைகள் சொல்லியும் செய்தும் முடிந்தவுடன் என்ன குறை இருந்தாலும், நான் உன்னை விரும்புகிறேன். உனக்கு ஒரு ஓவியன் போன்ற நேர்த்தியான மெலிந்த விரல்கள் இருக்கின்றன. உனக்கு சிறந்த உணர்ச்சி மிக்க ஆத்மா இருக்கின்றது.......


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**லொபாஹின்:** *(அவனைத் தழுவுகின்றான்)* நண்பனே சென்று வாருங்கள் ஒவ்வொன்றுக்கும் எமது நன்றி. நீர் தேவைப்பட்டால் உமது பிரயாணத்திற்கு நான் சிறிதளவு பணம் தரலாம்.

**ட்ரொபிமோவ்:** எதற்காக? எனக்கு அது தேவை இல்லை.

**லொபாஹின்:** ஆனால் உன்னிடம் எதுவும் இல்லையே!

**ட்ரொபிமோவ்:** ஆம், நான் வைத்திருக்கின்றேன். நன்றி ஒரு மொழி பெயர்ப்புக்காக நான் கொஞ்சம் பெற்றுக் கொண்டேன். இங்கே என்னுடைய சட்டைப்பையில் அது இருக்கிறது. *(மிகுந்த ஆவலுடன்)* எனது கையுறைகளைத்தான் காண முடியவில்லை.

**வார்யா:** *(மற்ற அறையிலிருந்து)* உமது அருவருப்பான பொருள்களை எடுத்துக் கொள்ளும் *(அவள் ஒரு சோடி ரப்பர் கையுறை களை அறையினுள் எறிகின்றாள்)*

**ட்ரொபிமோவ்:** ஏன் கோபப்படுகின்றீர் வார்யா, ம்... ஆனால் இவை கள் என்னுடையவை அல்லவே.

**லொபாஹின்:** சென்ற கோடைக்காலத்தில் ஆயிரம் ஏக்கர் நிலத்தில் "பொப்பி" செடி பயிரிட்டேன். இப்பொழுது அதனில் மொத்த இலாபமாக நாற்பதினாயிரம் பெற்றுக் கொண்டேன். அவைகள் பூத்துக் குலுங்கிய பொழுது என்ன அழகான காட்சியாக இருந்தது. நான் என்ன சொல்ல விரும்புகின்றேன் என்றால் நான் நாற்பதினாயிரம் உழைத்து விட்டேன். நான் இப்பொழுது உமக்கு கடன் கொடுக்க முன்வருகின்றேன். ஏனென்றால் அத்தகைய ஒரு நிலையில் நான் உள்ளேன். ஏன் அதிர்ந்து கொண்டீர்? நான் ஒரு கிராமப் புறத்தவன்..... என்னிடம் நல்ல பழக்கவழக்கங்கள் இல்லை.

**ட்ரொபிமோவ்:** உமது தந்தையார் ஒரு கமக்காரன். எனது தந்தையார் ஒரு மருந்து வியாபாரி. அதில் ஒன்றுமே இல்லை. *(லொபாஹின் பணப்பையை எடுக்கிறான்)* அதனை அங்கே வையும் அதனை அங்கே வையும்....... நீர் எனக்கு இரு நூறாயிரம் கொடுத்தாலும் நான் அதனைப் பெற்றுக்கொள்ள மாட்டேன். நான் ஒரு சுதந்திர



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதன். நீங்கள் மிகவும் உயர்ந்ததென மதிக்கும் அல்லது அருமையானதெனக் கணிப்பவை எல்லாமே பணம் படைத்தவராயினும் ஏழைகளாயினும் சரி இவ்விடயம் சம்பந்தமாக எவையுமே என்மேல் தனது வலிமையைக் காட்ட முடியாது. அவைகள் எல்லாம் சும்மா காற்றில் பறக்கக்கூடிய பதார்த்தங்கள். நான் வலிமையுடையேன். பெருமையுடையேன். நீர் இல்லாமல் நான் எதையும் செய்யக்கூடிய நிலையில் உள்ளேன். நான் உம்மைக் கடந்து செல்லக் கூடியவன் மனித இனம் மிக உன்னதமான உண்மையைத் தேடி முன்னேறிக் கொண்டிருக்கிறது. அது தான் உலகின் கண்ணே கிடைக்கக் கூடிய மிகப்பெரிய இன்பமாகும். நானும் அதை நோக்கிப் பிரயாணம் செய்து கொண்டிருக்கின்றேன்.

**லொபாஹின்:** நீர் அங்கே சென்று விடுவீரா?

**ட்ரொரி விமோவ்:** ஆம் *(ஒரு தரிப்பு)* நானே அங்கு செல்வேன் அல்லது மற்றவர்கள் சென்றடைய வழிகாட்டுவேன். *(தூரத்திலே ஒரு மரம் கோடாரியினால் வெட்டப்படும் சத்தம் கேட்கின்றது)*

**லொபாஹின்:** நல்லது சென்று வாரும். நண்பனே புறப்படுவதற்கு நேரமாகின்றது. நாம் ஒருவர் முன்னே ஒருவர் நின்று வழிகாட்டிக் கொண்டிருக்கின்றோம். இந்நேரத்தில் வாழ்க்கையும் வழுகிச் செல்கின்றது. நான் ஒரு நேரமும் ஓய்வெடுக்காது நீண்ட நேரம் வேலையிலீடுபடும் பொழுது எனது மனதின் கண்ணே சந்தோஷம் தோன்றுகின்றது. அத்துடன் நான் ஏன் உலகில் வாழ்கின்றேன் என்ற தத்துவமும் எனக்குத் தெரியும் என்று கற்பனை பண்ணுகின்றேன். எனது நண்பனே ருஷ்யாவில் எத்தனை மனிதர்கள் ஒருவித நோக்கமுமில்லாமல் வாழ்கின்றனர். நல்லது, பரவாயில்லை ஒருவேளை இது தேவையற்ற விடயமுமாக இருக்கலாம்.. லியோனிட்அண்ரீச் வருடம் ஆறாயிரம் வருமானம் பெறும் வங்கி உத்தியோகம் பெற்றிருக்கிறார் என்று கதைக் கிறார்கள். அவர் அந்த உத்தியோகத்தில் நிலைத்திருக்க மாட்டார். அவர் அதிகம் சோம்பல் உள்ளவர்.

**அன்யா:** *(வாசலில் நின்று)* அம்மா தான் இவ்விடம் நின்று விலகும் வரை சேர்ரி மரங்களை வெட்ட வேண்டாமென்று கேட்டுக் கொள்கின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ட்ரொபிமோவ்:** நானும் அவ்வாறு வெட்டவேண்டாமென்று சொல்ல வேண்டும்? உங்களுக்குப் புத்தி சாதுர்யம் இருக்கின்றதா? *(மண்டபத்தினூடாக வெளியேறுகின்றான்)*

**லொபாஹின்:** சரி, சரி இந்த மனிதர்கள்...... *(ட்ரொபிமோவ்வைப் பின் தொடர்ந்து செல்கின்றான்)*

**அன்யா:** பீர்ஸ் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டாரா?

**யாஷா:** அவரை அழைத்துச் செல்லும்படி இன்று காலை நான் அவர்களிடம் சொன்னேன். அவர் போயிருக்க வேண்டுமென்று நான் நினைக்கின்றேன்.

**அன்யா:** *(நடன அறையினூடே செல்லும் யெப்பிஹொடோவ்விற்கு)* சிமியோன் பன்ரிலீச், பீர்ஸ் வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டாரா என்பதை அறிந்து செல்லமாட்டீரா?

**யாஷா:** *(கோபமடைந்து)* நான் இன்று காலை யெகோருக்குச் சொல்லியிருந்தேன். பத்துத் தடவைகள் கேட்க வேண்டிய தேவை உண்டா?

**யெப்பிஹொடோவ்:** இந்த வயது முதிர்ந்த வேலை செய்ய முடியாத பீர்ஸ் வெளிப்படையாகச் சொன்னால் அவர் திருத்திக் கொள்வதற்கு அப்பாற்பட்டுவிட்டார் என்று நான் கருதுகின்றேன். அவர் சென்று தனது மூதாதையாரைச் சேர்ந்து கொள்ள வேண்டும். என்னைப் பொறுத்த மட்டில் நான் அவரைப் பார்த்து பொறாமைப்படுகின்றேன். *(அவர் ஒரு உடுப்புப் பெட்டியை, தொப்பிகள் அடங்கிய ஒரு அட்டைப் பெட்டியின் மேல் வைத்து அதனை நசுக்கிக் கொள்கின்றார்)* அதோ...... அதோ பாரும்!........ எனக்கு அது தெரிந்திருக்க வேண்டும். *(வெளியே போகின்றார்)*

**யாஷா:** *(பரிகாசமாக)* இரண்டு சக இருபது துர் அதிர்ஷ்டங்கள்!

**வார்யா:** *(கதவின் பின்னே இருந்து)* பீர்ஸ் வைத்திய சாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டு விட்டாரா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அன்யா:** ஆம்

**வார்யா:** வைத்தியருக்குக் கொடுக்க வேண்டிய கடிதத்தை ஏன் அவர்கள் எடுத்துச் செல்லவில்லை?

**அன்யா:** யாரையாவது இக்கடிதத்துடன் அவாகள் பின்னே அனுப்பு கின்றேன். ......... *(வெளியேறுகின்றாள்.)*

**வார்யா:** *(பக்கத்து அறையிலிருந்து)* யாஷா எங்கே? அவருடைய தாயார் இங்கே இருக்கின்றார். தான் செல்வதற்கு அவரிடம் விடைபெற விரும்புவதாக அவரிடம் சொல்லுங்கள்.

**யாஷா:** *(கையசைத்து விடைகொடுக்கிறான்)* அவா் மேல் எனது பொறுமையை இழக்கச் செய்கின்றார். *(மேற்கூறப்பட்ட நிகழ்வுகள் நடைபெறும் பொழுது, நீனியாஷா பொதிகளுடன் வீண் பரபரப்புக்களை ஏற்படுத்திக் கொள்கின்றாள். யாஷா இப்பொழுது தனியே நிற்பதைக் கண்டு அவனிடம் வருகின்றாள்.)*

**நீனியாஷா:** நீர் என்னை ஒருமுறை மட்டும் பாரும்! நீர் போகின்றீர்...... என்னைவிட்டுச் செல்கின்றீர்! *(அவள் தன்னுடைய கைகளை அவனுடைய கழுத்தைச் சுற்றிப்போட்டுக் கொண்டு அழுகின்றாள்.)*

**யாஷா:** அழுவதில் என்ன அர்த்தம்? *(மதுவைப் பருகுகின்றான்)* ஒரு கிழமையில் நான் திரும்பவும் பாரிஸ் நகரத்தைச் சேர்வேன். நாளைக்கு நாம் கடுகதி புகைவண்டியில் பிரயாணம் மேற்கொள்வோம் - நாம் தூரப்போய் விடுவோம் - நாங்கள் அப்படியே மறைந்து விடுவோம்! என்னால் அதனை நம்ப முடியவில்லை - பிரான்ஸ்! இந்த இடம் எனக்குப் பொருந்த வில்லை. என்னால் இங்கு வாழ முடியாது. இங்கே ஒன்றும் நடைபெறுவதில்லை. இங்கு எல்லாவிதமான அறிவின்மையையும் கண்டுவிட்டேன். *(குடிக்கிறான்)* எதற்காக அழுகின்றீர்? ஒரு கௌரவமான பெண்பிள்ளை போல நடந்து கொள்ளும். அப்போது அழுவதற்கு ஒரு தேவையும் ஏற்படாது.

**நீனியாஷா:** *(கைக்கண்ணாடியைப் பார்த்து நாசியின் மேல் வாசனைத் தூள் பூசிக் கொள்கின்றாள்)* பாரிஸ்ஸிலிருந்து எனக்குக் காகிதம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுதும். எழுதமாட்டீரா? நான் உம்மை நேசித்தது உமக்குத் தெரியும். நான் உம்மை எவ்வளவு நேசித்தேன்! யாஷா நான் மென்மையான இருதயம் உள்ளவள்

**யாஷா:** யாரோ வருகிறார்கள் *(அமைதியாகத்தனக்குள் பாடிக்கொண்டு உடுப்புப்பெட்டியினுள் வேலை செய்வது போல நடிக்கின்றான். லூபோவ்அன்திரீவ்னா, கயேவ், அன்யா, சாளொற்றாஜவனோவ்னா யாவரும் அங்கு பிரவேசிக்கின்றனர்)*

**கயேவ்:** நாங்கள் போக வேண்டும். அதிக நேரம் தாமதிக்க முடியாது. *(யாஷாவைப் பார்க்கின்றார்)* இங்கே யாரில் மீன் வாசனை வீசுகின்றது?

**லூபோவ்அன்திரீவ்னா:** இன்னும் பத்து நிமிடத்தில் நாம் குதிரை வண்டியில் ஏறவேண்டும். ...... *(அறையைச் சுற்றிப் பார்வை யிடுகின்றாள்)* அருமையான இல்லமே, பேரனாரின் பழைய இல்லமே! போய் வருகின்றேன். மழைக்காலம் மறையும் கோடைக்காலம் திரும்ப வரும். அப்பொழுது நீங்கள் இங்கே இருக்க மாட்டீர்கள். நீங்கள் இழுத்தெறியப்பட்டு விடுவீர்கள். இந்தச் சுவர்கள் எவ்வளவோ பார்த்துவிட்டன. *(மகளை அவாவுடன் முத்தமிடுகிறாள்)* எனது சிறிய பொக்கிஷமே நீர் எவ்வளவு பிரகாசமாகத் தோற்றமளிக்கிறீர், உமது கண்கள் வைரக் கற்கள் போன்று பளபளக்கின்றன. நீர் சந்தோஷமாக இருக்கிறீரா? மிகவும் சந்தோஷமாக இருக்கின்றீரா?

**அன்யா:** ஆம், மிகவும். அம்மா எங்களது புதிய வாழ்க்கை இப்பொழுது தான் தொடங்குகின்றது.

**கயேவ்:** *(உற்சாகமாக)* அது உண்மையிலேயே அப்படி இருக்கிறது. இப்பொழுது சகலதும் சரியாகி விட்டது. செர்ரித் தோட்டம் விற்பனையாக முன் எல்லோரும் கவலையுற்றும் குழப்ப மடைந்தும் இருந்தோம். கடைசியாக எல்லாம் முற்றுப் பெற்ற உடனேயே எல்லாம் ஒரே முறையில் எல்லோரும் அமைதியாகிவிட்டோம். எல்லாம் சொல்லி நடந்த பின்பு உண்மையிலே முற்றான ஒரு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகிழ்ச்சியை உணர்ந்தோம். இப்பொழுது நான் ஒரு வங்கி ஊழியன்...... ஒரு பொக்கிஷதாரர்..... நீர் லூபா, நீர் முன்பைவிடத் திருந்திய தோற்றத்துடன் காட்சி அளிக்கின்றீர். இங்கே இதுபற்றி ஒரு சந்தேகமும் இல்லை.

**லூபோவ் அன் திரீவ்னா:** ஆம் எனது நரம்புகள் நன்றாக இருக்கின்றன. அது உண்மை *(அவளுடைய தொப்பியையும் மேலங்கியையும் அணிவதற்கு ஒருவர் உதவி செய்கின்றார்)* நான் நன்றாகத் தூங்குகின்றேன். யாஷா என்னுடைய பொருள்களை வெளியே எடும். நேரமாகின்றது. *(அன்யாவிற்கு)* எனது சிறு பெண்ணே, நாங்கள் ஒருவரை ஒருவர் திரும்பவும் விரைவில் கண்டு கொள்வோம். நான் பாரிஸ்ஸிற்குப் போகின்றேன். யாரோசிலேவில் உள்ள உமது பாட்டி தோட்டத்தை வாங்குவதற்கு எங்களுக்கு அனுப்பிய பணத்தில் நான் அங்கே வசித்துக் கொள்வேன். -- கடவுள் பாட்டியை ஆசீர்வதிப்பாராக. அந்தப்பணமும் அதிக நாட்களுக்குத் தாக்குப் பிடிக்காது.

**அன்யா:** அம்மா நீங்கள் விரைவில் திரும்பி வருவீர்கள்......... முற்றிலும் விரைவாக, இல்லையா? உயர்நிலைப் பாடசாலையில் நான் கல்வி கற்றுப் பரீட்சையில் சித்தியடைவேன். பின்பு நான் வேலை பார்த்து உங்களுக்கு உதவி செய்வேன். நாங்கள் இருவரும் சேர்ந்து எல்லா வகையான புத்தகங்களையும் வாசிப்போம். *(தனது தாயினது கைகளை முத்தமிடுகிறாள்)* நீண்ட இலையுதிர் காலம் முழுவதும் நாங்கள் பெருந்தொகையான புத்தகங்களை வாசிப்போம். ஒரு புதுவிதமானதும் அதிசயம் நிறைந்ததுமான உலகம் எங்கள் கண்முன்னே விரியும்..... *(கனவுநிலையிலே)* அம்மா திரும்பி வாருங்கள்.

**லூபோவ் அன் திரீவ்னா:** எனது பொக்கிஷமே, நான் திரும்பவும் வருவேன். *(அவளைத் தழுவுகின்றாள் சாளொற்றா தனக்குள்ளே ஒரு பாட்டை அமைதியாகப் பாடியபடி, லொபாஹின் இருவரும் வருகின்றனர்)*

**கயேவ்:** மகிழ்ச்சி பொருந்திய சாளொற்றா! அவள் பாடுகின்றாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சாளொற்றா:** *(துணிக் கற்றையில் சுற்றிக் காணப்படும் ஒரு குழந்தை போல தோன்றும் ஒரு பொதியினை எடுக்கிறாள்)* சிறிய குழந்தாய், சென்று வருகிறோம். *(ஒரு குழந்தை அழுவது போன்ற சத்தம் கேட்கின்றது)* அமைதியாக இரும் எனது இனிய குழந்தையே, நல்ல சிறிய பையனாக இரும். *(அழுகை தொடர்கிறது)* குழந்தையே எனது இதயம் உனக்காக அழுகிறது. *(பொதியைக் கீழே எறிகின்றாள்)* நீங்கள் எனக்கு வேறொரு வேலை தேடப் போகிறீர்களா, தயவு செய்து? ஒரு வேலையற்று என்னால் இருக்க முடியாது.

**லொபாஹின்:** உமக்கு ஒரு வேலை கண்டு பிடிப்போம். சாளொற்றா ஐவனோவ்னா கவலையை விடுங்கள்.

**கயேவ்:** ஒவ்வொருவரும் எங்களை விட்டுச் செல்கின்றனர். வார்யா போகின்றாள்...... திடீரென்று நாங்கள் ஒருவருக்கும் தேவை யில்லாதவர்களாகி விட்டோம்.

**சாளொற்றா:** பட்டணத்தில் வாழ்வதற்கு எனக்கு ஒரு இடமில்லை. நான் போக வேண்டும். *(மௌனமாக இசைக்கிறாள்)* ஓ நல்லது, பரவாயில்லை. *(பிஸ்சிக் வருகின்றான்)*

**லொபாஹின்:** என்ன ஒரு அற்புதக் காட்சி!

**பிஸ்சிக்:** *(மூச்சுத் திணற)* ஊ, எனது மூச்சை நான் பெற்றுக்கொள்ள விடுங்கள். நான் மிகவும் இளைத்து விட்டேன்....... எனது இனிய நன்பர்காள் என்...... எனக்குச் சிறிது நீர் கொடுங்கள்.

**கயேவ்:** நீர் காசு கடன் கேட்க வந்திருக்கிறீர் என்று நான் கருது கின்றேன். நான் போவது நல்லது..... என்னை மன்னித்துக் கொள்ளும்..... *(வெளியேறுகின்றான்)*

**பிஸ்சிக்:** நீண்ட நாட்களாக நான் இங்கு உங்களைக் காண வரவில்லை. எனது அழகுமிக்க பெண்ணே..... *(லொபாஹினுக்கு)* அப்போ நீர் இங்கு இருக்கின்றீர்..... உம்மைக் காண நான் மிகவும் மகிழ்ச்சி அடைகின்றேன். ..... நீர் ஒரு விவேகம் மிக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதன் ..... இங்கே இதனை எடும் ..... *(லொபாஹினிடம் பணம் கொடுக்கிறான்)* நானூறு றூபிள்கள் ..... இன்னும் நான் உமக்கு எண்ணூற்று நாற்பது கடன் கொடுக்க வேண்டும்.

**லொபாஹின்:** ஆச்சரியமடைந்து *(தனது தோள்களை குலுக்கிக் கொள்கின்றான்.)* இது ஒரு கனவு போன்றது..... எங்கே இதனைப் பெற்றுக் கொண்டீர்?

**பிஸ்சிக்:** சிறிது நேரம் பொறும் ..... நான் மிகவும் வெப்பமடைந்திருக்கிறேன். ஆசாதாரண விடயம் ஒன்று நடந்துள்ளது. சில ஆங்கிலேயர்கள் என்னைக் காண வந்தார்கள். எனது நிலத்தில் ஒரு வகையான வெள்ளைக் களிமண்ணினைக் கண்டு கொண்டார்கள் ..... *(லூபோவ் அன்திரீவ்னாவிற்கு)* இங்கே நானூறு உமக்கும் எனது அன்பிற்குரிய வசீகரம் மிக்க பெண்ணே..... *(அவரிடம் பணத்தைக் கொடுக்கிறான்)* மிகுதிப் பணத்தை பின்பு பெற்றுக் கொள்வீர். *(தண்ணீர் பருகுகின்றான்)* இப்பொழுது பெரிய தத்துவஞானியோ யாரோ கூரைக்கு மேலாலே பாயும்படி சனத்திற்குப் புத்திமதி கூறினார். நீர் அப்படிப்பாயும் போது அவர் சொல்கிறார், அது எல்லாப் பிரச்சினைகளையும் தீர்த்து வைக்குமாம். *(இப்போது சொன்னவற்றால் மிகவும் ஆச்சரியமடைந்தவர் போல)* கற்பனை பண்ணுங்கள்! தயவு செய்து இன்னும் சிறிது தண்ணீர்.

**லொபாஹின்:** யார் இந்த ஆங்கிலேயர்கள்?

**பிஸ்சிக்:** களியுடன் கூடிய நிலத்தை அவர்களுக்கு இருபத்து நான்கு வருடங்களுக்கு விட்டிருக்கின்றேன். இப்பொழுது நீங்கள் என்னை மன்னிக்க வேண்டும். நான் மிகவும் அவசரத்தில் உள்ளேன். எவ்வளவு விரைவாகப் போக இயலுமோ அவ்வளவு விரைவாக நான் போய்க் கொண்டிருக்க வேண்டும். நான் நொயிக்கோவ், பின்பு காடமனோவ்..... எல்லோருக்கும் நான் கடன் செலுத்த வேண்டும். *(தண்ணீர் பருகுகின்றான்)* உங்கள் எல்லோருக்கும் சுகம் கிடைக்கட்டும். நான் திரும்பவும் வியாழக்கிழமை உங்களைச் சந்திப்பேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**லூபோவ் அன்திரீவ்னா:** நாங்கள் இப்பொழுதுதான் பட்டணத்திற்குப் புறப்பட ஆயத்தமாயிருந்தோம். நாளை நான் வெளிநாடு போகின்றேன்.

**பிஸ்சிக்:** என்ன அது? *(எரிச்சலுடன்)* பட்டணத்திற்கு எதற்காகப் போகின்றீர்? நான் இப்பொழுது காண்கின்ற இந்தத் தள பாடங்கள், உடுப்புப் பெட்டிகள் எல்லாம் ..... நல்லது பரவாயில்லை. *(கண்ணீருடன்)* பரவாயில்லை..... இந்த ஆங்கி லேயர் எல்லாம் உங்களுக்குத் தெரிய வேண்டும். மிகக் கூடிய புத்திநுட்பம் உள்ளவர்கள் ..... பரவாயில்லை உங்களுக்கு எல்லாவிதமான சந்தோஷமும் கிடைக்க நான் வாழ்த்துகின்றேன். கடவுள் உங்களுடன் இருப்பாராக. பரவாயில்லை, ஒவ்வொன்றும் படிப் படியாக ஒரு முடிவுக்கு வரும். *(லூபோவ்அன்திரீவ்னாவின் கைகளை முத்தமிடுகிறான்)* என்னுடைய இறுதி வந்துவிட்டது என்று நீங்கள் கேள்விப்பட்டவுடன் ஒரு குதிரையை நினைத்துக் கொண்டு இவ்வாறு சொல்லுங்கள். "இப்படியான ஒருவர் முன்பு இருந்தார்..... அவருடைய பெயர் சிமியனோவ் - பிஸ்சிக் ஆண்டவர் . அவருடன் இருப்பாராக" எங்களுக்கு நல்ல ஆச்சரியமான காலநிலையாக இருக்கின்றது. ஆம் ..... *(தர்ம சங்கடமான நிலைக்கு ஆளாகி வெளியே போகின்றான் ஆனால் உடனே திரும்பி வந்து கதவின் வழியே நின்று சொல்கின்றான்)* டஷேங்கா உங்களுக்குத் தனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறாள். *(வெளியே போகின்றான்)*

**லூபோவ் அன் திரீவ்னா:** நல்லது நாங்கள் இப்பொழுது போகலாம். நான் எனது மனத்தில் இரண்டு கவலைகளுடன் இவ்விடத்தை விட்டுப் போகின்றேன். ஒன்று fபீர்ஸ். அவர் வருத்தமாக இருக்கிறார் உங்களுக்குத் தெரியும். *(கைக்கடிகாரத்தை நோட்டமிடுகிறாள்)* எங்களுக்கு இன்னுமொரு ஐந்து நிமிஷம் வரை இருக்கிறது......

**அன்யா:** அம்மா fபீர்ஸ் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு விட்டார். இன்று காலை யாஷா அவரை அனுப்பினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**லூபோவ் அன்திரீவ்னா:** மற்றையது வார்யா. அவள் விடியற் காலையில் எழுந்து வேலை செய்யப் பழகிவிட்டாள். இப்பொழுது வேலை இல்லாது அவள் நீரை விட்டு வெளியே வந்த மீனைப்போல இருக்கின்றாள். அவள் மெலிந்து வெளிறிக் காணப்படுகிறாள். பரிதாபத்திற்குரிய அவள் அதிகம் அழுது கொள்கிறாள். *(ஒரு தரிப்பு)* யேமோலாய் அலெக்சீச் எமக்கு நன்றாகத் தெரியும் நான் அவரைத் திருமணம் செய்து வைக்கலாம் என்று நம்புகிறேன்..... நீரும் அவளைத் திருமணம் செய்யக் கருதினீர் என்று ஒவ்வொரு செயலிலும் காண்பித்தீர். *(அன்யாவிற்கு இரகசியமாக சொல்ல அன்யா சாளொற்றாவிற்கு கண்சாடை செய்துவிட்டு இருவரும் வெளியே செல்கின்றனர்)* அவள் உம்மை நேசிக்கிறாள். நீரும் அவளை விரும்பியிருக்க வேண்டும்...... நீங்கள் இருவரும் ஒருவரை ஒருவர் ஏன் விலகிச் செல்வது போல தோன்று கிறீர்களென்று எனக்குத் தெரியவில்லை. எனக்கு இது புரிய வேயில்லை.

**லொபாஹின்:** எனக்குமே தெரியவில்லை. நான் ஒத்துக்கொள்கின்றேன். எல்லாம் ஒரே அதிசயமாக இருக்கின்றது..... இன்னும் நேரம் இருக்குமேயானால், இப்பவும் நான் தயாராகவே இருக்கின்றேன். உடனே நாங்கள் அதனைத் தீர்த்து வைக்க வேண்டும் - அதனை முடித்துவிட வேண்டும்! நீங்கள் இங்கே இல்லாமல் நான் அவளுக்குத் திருமண விருப்பத்தைத் தெரிவித்துக் கொள்வது எப்போதுமே சாத்தியமில்லை என்றே நான் உணர்கின்றேன்.

**லூபோவ் அன்திரீவ்னா:** அது ஒரு உன்னதமான நோக்கம். ஒரு நிமிடம்கூட உமக்குத் தேவைவராது. அவ்வளவுதான் அவளை நான் கூப்பிடுகின்றேன்.

**லொபாஹின்:** பிரான்ஸ் மதுவும் இருக்கிறது . தருணத்திற்கு மிகவும் பொருத்தமானது. *(கோப்பைகளைப் பார்த்துக் கொள்கின்றான்)* ஆனால் அவைகள் வெறுமையாக இருக்கின்றன. யாரோ அதைக்குடித்து முடித்துவிட்டார்கள். *(யாஷா இருமுகின்றான்)* நக்கிக் குடித்து முடித்துவிட்டார்கள் என்றே நான் சொல்ல வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**லூபோவ் அன்திரீவ்னா:** *(உற்சாகத்துடன்)* நான் மிகவும் சந்தோஷமாக இருக்கிறேன். நாங்கள் வெளியே செல்வோம். யாஷா, நான் அவளைக் கூப்பிடுவேன் ..... *(கதவினூடே)* வார்யா, ஒரு நிமிடம் இங்கு வாரும், நீர் செய்கின்ற வேலையை விட்டுவிட்டு ஒரு நிமிடம் வாரும்! வார்யா! *(யாஷாவுடன் வெளியே செல்கின்றார்)*

**லொபாஹின்:** *(கைக்கடிகாரத்தை நோட்டமிடுகின்றான்)* ஆம் ..... *(ஒரு தரிப்பு. அடக்கிய சிரிப்பொலியும் இரகசிய ஒலியும் கதவின் பின்னே கேட்கின்றது. ஈற்றில் வார்யா அங்கே வருகின்றாள். வந்து பிரயாணப் பொதியை ஆராய்கின்றாள். சிறிது நேரத்தின் பின் அவள் சொல்கின்றாள்)*

**வார்யா:** அது அதிசயமாக இருக்கின்றதே, என்னால் கண்டு கொள்ள முடியவில்லை.....

**லொபாஹின்:** என்ன தேடுகின்றாய்?

**வார்யா:** நானே பொருட்களை அடுக்கினேன் இருந்தும் எனக்கு ஞாபக மில்லை..... *(ஒரு தரிப்பு)*

**லொபாஹின்:** வார்வராமிகெய்லோவ்னா, இப்பொழுது நீர் எங்கே போகப் போகிறீர்?

**வார்யா:** நானா? ரோகுலின்ஸ்க்கு அவர்களுக்கு வீட்டை மேற்பார்வை செய்யச் சம்மதித்துள்ளேன் ..... வீட்டிலுள்ளோரைப் பரா மரித்துப் பாதுகாப்பது போன்ற வேலை.

**லொபாஹின்:** அதாவது யாழ்நேவோவில், அப்படித்தானே? அது இங்கே இருந்து எழுபது மைல்கள் *(ஒரு தரிப்பு)* அப்போ இதுதான் இந்த வீட்டின் வாழ்க்கையின் முடிவாகின்றது.....

**வார்யா:** *(பிரயாணப் பொதியை ஆராய்கிறாள்)* ஆனாலும் அது எங்கே இருக்கலாம்? அல்லது ஒரு வேளை ட்ரங்குப் பெட்டியினுள் அடைத்து வைத்துவிட்டேனோ? ..... ஆம் இந்த வீட்டு வாழ்க்கை ஒரு முடிவுக்கு வந்து விட்டது..... இனிமேல் இங்கே ஒன்றுமேயில்லை.....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**லொபாஹின்:** நான் தற்பொழுது கார்க்கோவிற்குச் செல்கின்றேன் ..... அடுத்த புகைவண்டியில், அங்கே எனக்குச் செய்ய வேண்டிய வேலைகள் நிறைய இருக்கின்றன. நான் இங்கே யெப்பிஹொாடோவை விட்டுச் செல்கின்றேன் ..... நான் அவரை வேலைக்குச் சேர்த்துக் கொண்டுவிட்டேன்.

**வார்யா:** நல்லது!

**லொபாஹின்:** உமக்கு ஞாபகமா?, கடந்த வருடம் இந்தநேரம் பனி பெய்யத் தொடங்கி விட்டது, ஆனால் இவ்வருடம் எல்லாம் அசைவற்றும் இன்னும் வெய்யிலாகவும் இருக்கிறது. இருந்தும் கொஞ்சம் குளிராக இருக்கிறது..... கிட்டத்தட்ட மூன்று பாகை பனி.

**வார்யா:** நான் பார்க்கவில்லை *(ஒரு தரிப்பு)* அது தவிர எங்களுடைய வெப்பமானி உடைந்துவிட்டது..... *(ஒரு தரிப்பு. கதவினுக்கு வெளியே இருந்து ஒரு குரல் கேட்கின்றது).* "யேமோலாய் அலெக்சீச்"

**லொபாஹின்:** *(அதனை அதிக நேரம் எதிர்பார்த்தது போன்று)* இந்தக்கணமே வருகின்றேன்!. *(வெளியே விரைவாகப் போகின்றான். வார்யா நிலத்தில் இருந்து கொண்டு துணிப்பொதி மேல் தலையை வைத்தபடி மெதுவாக விம்முகிறாள். கதவு திறக்கிறது. லூபோவ் அன்திரீவ்னா அமைதியாக வருகிறார்)*

**லூபோவ் அன்திரீவ்னா:** நல்லது? *(ஒரு தரிப்பு)* நாங்கள் போக வேண்டும்.

**வார்யா:** *(அழுவதை நிறுத்திவிட்டு, கண்களைத் துடைக்கின்றாள்)* ஆம், நேரமாகிவிட்டது அதன்பின் அம்மா புகைவண்டியை நாம் தவறவிடாமல் இருந்தால் நான் றோகுலின்ஸ் ஐ இன்றே சென்றடைய முடியும்.

**லூபோவ் அன்திரீவ்னா:** *(கதவினூடே கூப்பிடுகின்றாள்)* அன்யா, தயவு செய்து உமது மேலங்கியைப் போடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*(அன்யா வருகிறாள் அவளைத் தொடர்ந்து கயேவ், சாளொற்றா ஜவனோவ்னா இருவரும் வருகின்றனர். கயேவ் தலைமூடியுடன் கூடிய ஒரு பாரமான மேலங்கி அணிந்திருக்கின்றார். யெப்பிஹொடோவ் பிரயாணப் பொதிகளுடன் வீண்தடல்புடன் செய்கின்றான்.)* இப்பொழுது நாம் எமது பிரயாணத்தைத் தொடங்கலாம்.!

**அன்யா:** *(சந்தோஷமாக)* ஆம், எமது பிரயாணம்!

**கயேவ்:** எனது நண்பர்களே, எனது அருமையான இரக்கம் மிகுந்த நண்பர்களே! இப்பொழுது நான் இந்த வீட்டை இறுதியாக விட்டுப் போகும் பொழுது எப்படி நான் அமைதியாக இருக்க முடியும்? கடைசிப் பிரியாவிடை கூறும் பொழுது என்னை மேற்கொள்ளும் உணர்ச்சிகளை உங்களுக்கு வெளிப்படுத்துவதிலிருந்து என்னை நான் எப்படி அடக்கிக்கொள்ள முடியும்.

**அன்யா:** *(மன்றாட்டமாக)* மாமா!

**வார்யா:** அன்பான மாமா, தயவு செய்து வேண்டாம்!

**கயேவ்:** எனது உணர்ச்சிகளை அடக்கிக் கொண்டு முற்றாகப் பின் பற்றுகின்றேன். ..... நான் அமைதியாக இருப்பேன்.

**ட்ரொபிமோவ்:** நல்லது, பெண்மணிகளே கனவான்களே, போவதற்கு நேரமாகிறது.

**லொபாஹின்:** யெப்பிஹொடோவ், எனது சட்டை!

**லூபோவ் அன்திரீவ்னா:** ஒரு சிறிதளவு அல்லது சிறிதுகூட நேரம் நான் இருக்கப் போகிறேன். நான் இந்த வீட்டின் சுவர்களையும் உட்கூரையையும் இதற்கு முன்பு ஒருபோதும் காணாதது போன்று உணர்கின்றேன். இப்பொழுது அவைகளை அவாவுடனும் பாசத் துடனும் நோக்குகின்றேன்......

**கயேவ்:** எனக்கு ஞாபகம், நான் ஆறுவயதுடையவனாக இருக்கும் பொழுது அன்று ஒரு பரிசுத்த நாள், நான் இந்த யன்னற் சுவரில் இருந்து கொண்டு அப்பா தேவாலயத்திற்குச் செல் வதைப் பார்த்துக் கொண்டிருந்தேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**லூபோவ் அன்திரீவ்னா:** எல்லோரும் தமது பிரயாணப் பொதிகளை எடுத்துவிட்டார்களா?

**லொபாஹின்:** எடுத்து விட்டார்கள் போலத் தோன்றுகின்றது. *(யெப்பிஹொடோவ்விற்கு, அவனுடைய சட்டையை அணிவித்துக் கொண்டிருக்கும் பொழுது)* யெப்பிஹொடோவ், ஒவ்வொன்றும் சரியாக இருக்கின்றதா என்று பாரும்.

**யெப்பிஹொடோவ்:** *(கம்மிய குரலில்)* கவலைப்பட வேண்டாம், யேமோலாய் அலெக்சீச்!

**லொபாஹின்:** எதற்காக அப்படிக் கதைக்கின்றீர்?

**யெப்பிஹொடோவ்:** இப்போதுதான் தண்ணீர் குடித்துள்ளேன், நான் எதனையோ விழுங்கியிருக்க வேண்டும்.

**யாஷா:** *(வெறுப்புடன்)* என்ன அறிவின்மை!

**லூபோவ் அன்திரீவ்னா:** நாம் இந்த இடத்தை விட்டு அகலும் பொழுது இந்த இடத்தில் ஒரு ஆத்மாவும் இருக்காது.....

**லொபாஹின்:** இளவேனிற் காலம் வரும் வரை.

**வார்யா:** *(உடுப்புப் பொதியிலிருந்து ஒரு குடையை இழுத்து எடுக்கிறாள். லொபாஹின் அவள் தனக்கு அடிக்கப் போவதாகக் கற்பனை பண்ணி பயப்படுவது போலப் பாசாங்கு செய்கின்றான்.)* இப்பொழுது ஏன் ..... ஏன் நீர் அப்படிச் செய்கிறீர்? ..... நான் ஒரு நாளும் அப்படி நினைக்கவில்லை.....

**ட்ரொரிவிமோவ்:** பெண்மணிகளே, துரைமார்களே, வாருங்கள் வண்டியில் ஏறுவோம். நேரம் அதிகமாகிவிட்டது. புகைவண்டி விரைவில் வந்துவிடும்.

**வார்யா:** பைஷியா, இங்கே இருக்கின்றன, உமது கையுறைகள் உடுப்புப் பெட்டியின் பின்னே *(கண்ணீருடன்)* எவ்வளவு பழையதாகவும் அழுக்காகவும் அவைகள் இருக்கின்றன.....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ட்ரொவிமோவ்:** *(அவைகளை அணிகின்றான்)* வாருங்கள் பெண்மணி களே துரைமார்களே!

**கயேவ்:** *(அழுகை வந்துவிடுமோ என்று பயந்து மிகவும் குழப்பம் அடைந்து)* அந்த புகைவண்டி, அந்த புகைவண்டி நிலையம் ..... அப்பாலே நடுப்பையினுள் .....

**லூபோவ் அன்திரீவ்னா:** நாங்கள் போவோம்!

**லொபாஹின்:** எல்லோரும் இங்கே வந்து விட்டார்களா? ஒருவரும் பின்னே விடுபடவில்லையா? *(இடப்பக்கக் கதவை தாளிடு கின்றான் அங்கே சில பொருள்கள் போடப்பட்டிருக்கின்றன)* அதைப் பூட்டுவதுதான் சிறந்தது வாருங்கள்!

**அன்யா:** செல்கிறோம் பழைய இல்லமே! செல்கின்றோம் பழைய வாழ்க்கையே!

**ட்ரொவிமோவ்:** புது வாழ்க்கைக்கு வணக்கங்கள் ..... *(அன்யாவுடன் வெளியே போகின்றான். வார்யா அறையைச் சுற்றிப் பார்வை யிட்டபடி மெதுவாகப் போகின்றாள். யாஷா நாயுடன், சாளொற்றா அவளைத் தொடர்ந்து செல்கின்றாள்.)*

**லொபாஹின்:** அப்போ, இளவேனிற் காலம் வரை, வாருங்கள் பெண்மணிகளே துரைமார்களே..... போய் வருகின்றேன்! மறுபடி சந்திக்கும் வரை கடவுள் காப்பாற்றுவாராக.

*(லூபோவ் அன்திரீவ்னாவும் கயேவும் தனியே விடப்படு கிறார்கள். அவர்கள் இத்தருணத்தை எதிர்பாத்தவர்கள் போல ஒருவரை ஒருவர் தழுவி அமைதியாக விம்முகிறார்கள். மற்றவர் களுக்குக் கேட்காதவாறு தம்மை அடக்கி அழுகின்றனர்)*

**கயேவ்:** *(நம்பிக்கை இழந்த குரலுடன்)* சகோதரி, எனது சகோதரி.....

**லூபோவ் அன்திரீவ்னா:** ஓ எனது கண்மணியே, எனது பொக்கிஷமே, எனது அழகுமிக்க பழத்தோட்டமே! எனது வாழ்க்கை, எனது இளமை, எனது சந்தோஷம் ..... செல்கின்றேன் ..... செல்கின் றேன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்யாவின் குரல் *(குதூகலமாக)* அம்மா.....

ட்ரொபிமோவ்வின் குரல் *(குதூகலத்துடனும், உத்வேகத்துடனும்)* ஆ - ஊ!

**லூபோவ் அன்திரீவ்னா:** கடைசிமுறையாக..... இந்தச் சுவர்கள் இந்தச் சாளரங்கள் ..... அம்மா இந்த அறையில் அங்குமிங்குமாக நடப்பதை மிகவும் விரும்பினார்.....

**கயேவ்:** சகோதரி, எனது சகோதரி! .....

**அன்யாவின் குரல்:** அம்மா!

**ட்ரொபிமோவ்வின் குரல்:** ஆ! ஊ!

**லூபோவ் அன்திரீவ்னா:** நாங்கள் வருகின்றோம் ..... *(இருவரும் போகின்றார்கள். அரங்கு வெறுமையாக இருக்கின்றது. கதவுகள் தாளிடப்படும் சத்தம் கேட்கின்றது. பின்பு வண்டிகள் செல்லும் சப்தம். பின்பு அமைதி வளர்கின்றது. இந்த அமைதியான நிலை கோடரி ஒன்று சப்தத்துடன் மோதும் மழுங்கிய ஒலியினால் குழம்புகின்றது. இச்சப்தம் துர்ப்பாக்கிய நிலையையும் துக்கத்தையும் தொனிக்கின்றது.)*

வலதுபக்க கதவிலிருந்து காலடிகளின் ஒலி வருகின்றது. ஃபீர்ஸ் தோன்றுகிறார். வழக்கம் போல அவர் வெள்ளைச் சட்டையையும் ஒரு வெளி அங்கியையும் அணிந்திருக்கிறார். பாதணிகளையும் அணிந்திருக்கின்றார். வருத்தமாகத் தோன்றுகின்றார்.

**ஃபீர்ஸ்:** *(நடுவேயுள்ள கதவின் அருகில் சென்று கைபிடியைத் திருகு கின்றார்)* பூட்டப்பட்டுள்ளது. அவர்கள் போய் விட்டார்கள்..... *(ஒரு சோபாவில் அமர்கிறார்)* அவர்கள் என்னைப்பற்றி மறந்து விட்டார்கள். பரவாயில்லை..... ஒரு சிறிது நான் இருப்பேன். நான் நினைக்கவில்லை லியோனிட் அண்ட்ரீச் கம்பளி அங்கியை அணிந்தாரோ என்று அவர் மெல்லிய ஆடையில் போயிருப்பார் என்றே நான் எதிர்பார்க்கிறேன் ..... *(பெருமூச்சு விடுகிறார், வேறு*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*சிந்தனையில் ஆழ்ந்தபடி)* நான் அதனைப் பார்க்கவில்லை..... இந்த இளம் பிள்ளைகள்! *(புத்தியற்ற வார்த்தைகள் சிலவற்றை முணுமுணுக்கின்றார்)* எனது வாழ்க்கை, நான் ஒருபோதும் சீவிக்கவில்லை என்று சொல்லுமளவிற்கு மாறிவிட்டது..... *(உறங்குகின்றான்)* நான் ஒரு சிறிது நித்திரை செய்வேன். உன்னிடம் ஒரு சிறிதளவு பலமும் மிகுதியாக இல்லை. ஒன்றும் விடுபட இல்லை ஒன்றும் இல்லை..... ஓ, நான் ..... நான் இறந்தே விட்டேன் ..... *( அசைவற்றுக் கிடக்கின்றான்)*

*(ஒரு தூரத்துச் சப்தம் கேட்கின்றது. அச் சப்தம் வானத்திலிருந்து வருவது போலத் தோன்றுகின்றது. ஒரு நாண் அறுந்தது போன்ற ஒலி கேட்கின்றது. மெதுவாகவும் துக்கமாகவும் அவ்வொலி குறைந்து செல்கின்றது. அதன்பின் அமைதி தோன்றுகின்றது. கோடரி ஒன்று தூரத்தே உள்ள பழத்தோட்டத்தில் மரமொன்றைத் தறிக்கும் சப்தத்தினால் அவ்வமைதி உடைந்து போகின்றது )*

## முற்றும்

**கல்யாணி வெது இதழில் வழிவழி வந்த வைரங்கள், கழமும் காட்சியும், மாணவர் பகுதி ஆகிய விடயங்கள் தவிர்க்க முடியாத காரணங்களினால் இடம்பெறவில்லை என்பதனை மன வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்வதோடு அடுத்த இதழில் அவையாவும் இடம்பெறும் என்பதனையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மரபுவழி அரங்கக் கலைகளில் சாதனைகள் பல புரிந்த "தமிழ்க் கலைக் காவலன்" "கலாஞானகேசரி" செல்லையா மெற்றாஸ்மயில் அவர்களுடன் ஒரு நேர்காணல்**

**நேர்கண்டவர்:- அரங்கொலி திரு ப. விஜேந்தன்**

**1) இலங்கையில் ஆடப்பட்டு வருகின்ற மரபுவழி ஆற்றுகைகளில் இன்று உங்களுடையபணி முக்கியமானதொன்றாகும். இத்துறைக்கு உங்களை அழைத்துச் சென்ற நிகழ்ச்சிகளை குறிப்பிட்டுச் சொல்ல முடியுமா?**

நான் முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு என்னும் கலைக் கிராமத்தில் பிறந்தவன். இக்கிராமத்தில் நான் சிறுவனாக இருந்த காலத்தை எண்ணிப் பார்க்கிறேன். நேர்த்திக்கடனுக்காக கோவலன் கூத்து, காத்தவராயன் கூத்தை வருடாவருடம் பலமுறை மேடை யேற்றுவதை இரவிரவாக மக்கள் பார்த்து ரசிப்பதையும் எண்ணு கின்றேன். கோவில் திருவிழாக்களில் கரகம், காவடி, கோலாட்டம் இடம் பெறுவதையும் பாடசாலைக் கொண்டாட்டங்களில் மரபுக் கலைகள் அத்தனையும் இடம்பெறுவதையும் எண்ணிப் பார்க்கின்றேன். கலியாண வீடு, சாமத்திய வீடு, புதுவருடக் கொண்டாட்டங்களில் ஊஞ்சல் பாட்டு உட்பட பல பாடல்கள், ஆடல்கள் இடம்பெற்றதை எண்ணிப் பார்க்கின்றேன். விவசாயிகள் அருவி வெட்டும் பொழுது பரத்தைப் பாடல்கள் பாடி அருவி வெட்டுவதையும் சூடு அடிக்கும் பாடலைப் பாடி சூடு அடிப்பதையும் எண்ணிப் பார்க்கின்றேன். மீனவர்கள் கடற்கரையில் "அம்பா" பாட்டுப் பாடி கரைவலை இழுப்பதை எண்ணிப் பார்க்கின்றேன். இவ்வாறு பல பல சுவையான சம்பவங்களில் பல்வேறு பாடல்களும், ஆட்டங்களும் இடம்பெற்றதை எண்ணிப் பார்க்கின்றேன். இவை எல்லாவற்றையும் நேரடியாகக் கண்டு, கேட்டு, சுவைத்தவர்களில் நானும் ஒருவனாவேன். எந்த நிகழ்வானாலும் பாடசாலையில் படிக்கும் போதே இரவிரவாக பார்க்கும் பழக்கம் என்னிடம் இருந்தது. பாடசாலையில் எட்டாம் வகுப்பு படிக்கும் போது அரிச்சந்திர மயான காண்டத்தில் அரிச்சந்திரனாக நடித்துப் பாராட்டைப் பெற்றேன். நாடகத்திற்குப் பொறுப்பான ஆசிரியர் இட மாற்றம் பெற்றதால் பின்னர் பாடசாலையில் நாடகம் மேடையேற்றும் வாய்ப்பு இருக்கவில்லை.

நான் உயர்தர வகுப்புக் கல்வியை யாழ்ப்பாணத்திலும் பின்பு பல்கலைக்கழகக் கல்வியைக் கொழும்பிலும் பெற்றுக்கொண்டவன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உத்தியோகத்தின் நிமித்தம் மாத்தறை, கொழும்பு, கண்டி, பேராதனை ஆகிய இடங்களிலும் வசித்து வந்ததால் மரபுக் கலைகளைப் பார்த்து ரசிக்கும் சந்தர்ப்பங்கள் கிடைக்கவில்லை.

1978ம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் திருமணம் செய்து கொண்டு யாழ்ப்பாணத்திற்கு மாற்றலாகிச் சென்ற பின் அடிக்கடி எனது பிறந்த இடமான புதுக்குடியிருப்புக்குச் செல்லும் வாய்ப்பு ஏற்பட்டது. அங்கு இடம்பெறும் மரபுக்கலை, கூத்து நிகழ்வுகளில் பார்வையாளனாகவும், விருந்தினராகவும் கலந்து கொள்ளக்கூடியதாக இருந்தது. எனினும் சிறுவனாக இருந்த காலத்தில் கண்டு கேட்ட மரபுக் கலைகள் அழிந்து துண்டு துண்டாக அங்குமிங்கும் சிதைந்து கொண்டு போவதை அறிந்து கொண்டேன். இதைக் கண்டு என்மனம் நொருங்கியது. அவ் வேதனையின் "பிரசவமாகவே வன்னிவள நாட்டார் பாடல்" என்ற தொகுப்பு நூல் மூலமாகப் பல நாட்டார் பாடல்களைத் தொகுத்து வெளியிட்டேன்.

பின்பு எனது 39வது வயதில் 1984ம் ஆண்டு முல்லைத்தீவு கல்விக் காரியாலயத்திற்கு இடமாற்றம் பெற்று புதுக்குடியிருப்பில் வசித்து வந்தேன். பாமர மக்களினால் மேடையேற்றப்படும் "கோவலன் கூத்து" "காத்தவராயன் கூத்து" ஆகியவற்றை அடிக்கடி பார்க்கும் வாய்ப்பு ஏற்பட்டது. கோவலன் கூத்தின் ஆட்டத்திறனை நன்கு ரசித்தேன. காத்தவராயன் கூத்தின் இராகத்தால் கவரப்பட்டேன். கிராமத்தின் மூலை முடுக்குகளில் இருக்கும் இக் கலை வடிவங்களின் சிறப்பை வெளி உலகுக்குக் கொண்டுவர வேண்டும் என எண்ணினேன்.

அப்போது இக் கலை வடிவங்கள் வளர்வதற்குத் தடையாக பின்வரும் காரணங்கள் இருப்பதை உணர்ந்து கொண்டேன்.

1) ஒவ்வொரு சாதி, சமய பிரிவுகளுக்குள்ளே கலைகள் அடங்கி ஒடுங்கிக் கிடந்தன. இதனால் ஒரு குறிப்பிட்ட சாதி சமயத்தினர் மேடையேற்றும் நாடகங்களுக்கு மற்றைய சமூகத்தினர் நடிகர் களாகப் பங்களிப்பதோ பார்வையாளராகப் பங்களிப்பதோ கிடை யாது.

2) பாமர மக்களினால் பங்கு ஏற்று நடிக்கும் நாடகங்களைப் பார்வை யிடவோ பங்கேற்று நடிப்பதற்கோ ஓரளவுதானும் படித்தவர்கள் கூட மனம் கொள்ளாதவர்களாக இருந்தார்கள். இவ்வாறு நடிப்பது தரக் குறைவு எனவும் எண்ணினார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3) ஒரு பிரதேசத்திற்குரிய கலைவடிவத்தைத் தமக்குள்ளேயே வைத்திருக்க வேண்டுமென்றும், குறிப்பிட்ட சமூகத்தினர் சில கூத்துக்களைத் தமது சமூகத்திற்குரிய கூத்து என சொந்தங் கொண்டாடுபவர்களாகவும் இருந்தனர்.

மரபுக் கலை வடிவங்களின் செழுமையைக் கண்ட நான் மேற்கூறிய காரணங்களை முறியடித்து கூத்து வடிவங்களை சுதந்திரப் படுத்தும் முயற்சிக்கு அத்திவாரமாக திட்டம் ஒன்றைத் தீட்டினேன். சாதி, சமய வேறுபாடில்லாமல் எல்லா சாதிக்கும் சந்தர்ப்பம் அளித்து பட்டதாரி ஆசிரியர்கள், உயர்தர அதிகாரிகள், உத்தியோகத்தர்கள், மாணவர்களைக் கொண்ட நாடகக் குழுவை உருவாக்கி நானே முக்கிய கதாநாயகனாகப் பங்கேற்று 'கோவலன் கூத்தை' தயாரித்தேன்.

எனக்கு அப்போது வயது 45. கூத்துப் பார்த்து ரசித்த அனுபவமே அல்லாது கூத்து ஆடியோ, பாடியோ அனுபவம் இல்லை. எனினும் பொறுப்பான பதவி வகித்து சமூகத்தில் முக்கிய அந்தஸ்தை பெற்றிருந்ததால் நான் முன்னின்றால் எனக்குப் பின் ஒரு கூட்டம் வரும் என்ற நம்பிக்கையில் பொறுப்பினை ஏற்றுக் கொண்டேன். எப்படியும் கூத்து ஆடியே ஆகவேண்டியிருப்பதனால் கோவலன் கூத்து அண்ணாவியார் கலாபூசணம் சுப்பிரமணியம் அவர்களிடம் கூத்தைப்பழக முற்பட்டேன். அத்துடன ஏனைய நடிகர்களும் பழகினார்கள். முதல் நாள் பழக்கத்தின் போது என்னை நோக்கி 'தம்பி உமக்கு ஆட்டம் சரிவராது' என்று சொல்லிவிட்டார். எனக்கு மிகவும் கவலையாக இருந்தது. நான் ஆடினால் தானே மற்ற உத்தியோகத்தர்களும் ஆட வருவார்கள். பெரிய பிரச்சனைக்குட்பட்ட நான் எனது மனதை சோரவிடவில்லை. தொடர்ந்து பழகினேன். பகலில் பழக்கம், இரவில் யாருமில்லாத இடத்தில் பழகியதைத் திருப்பி ஆடிப் பார்த்தல். இவ்வாறு எனது விடா முயற்சியினாலும் தன்னம்பிக்கையினாலும் ஆட்டத்தை முறையாகக் கற்றுக் கொண்டு பாட்டையும் தாளம் பிசகாது படிக்கக் கற்றுக் கொண்டேன். ஏனைய உத்தியோகத்தர்களும் அண்ணாவியாரிடம் பழகிக் கொண்டார்கள். பாமர மக்களினால் குறிப்பிட்ட சாதியினரால், குறிப்பிட்ட சமயத்தினரால், குறிப்பிட்ட சமூகத்தினரால் இரவிரவாக ஆடப்பட்ட 'கோவலன் கூத்தை' கல்வி, சாதி, சமய, சமூக வேறுபாடுகளுக்கு அப்பாற்பட்டு நின்று இரண்டு மணித்தியாலத்தில் சுருக்கி அரங்கேற்றி மாபெரும் வெற்றியை கண்டேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எந்தெந்தக் கிராமங்களில் இந்தக்கூத்து முழுமையாக ஆடப் பட்டதோ அந்தந்தக் கிராமங்களில் எமது கூத்து மேடையேற்றப்பட்டது. படித்தவர், படியாதவர் என்ற வேறுபாடின்றி சமய சாதி வேறுபாடின்றி, சமூக வேறுபாடின்றி ஊரே திரண்டு வந்து நின்று கூத்தைப் பார்த்து ரசித்துக் கரகோசம் செய்து ஆரவாரித்து எம்மைப் போற்றினர், வாழ்த்தினர். இந்த முதல் முயற்சியே பெரும் வெற்றியை ஈட்டியதால் மிகவும் மனம் மகிழ்ந்த நான் நாட்டுக் கூத்துக்கு இசைநாடகம், மரபுக் கலைகள் எல்லாவற்றுக்கும் என்னை அர்ப்பணிக்கத் தீர்மானித்தேன். தொடர்ந்து கலைப்பணி புரிந்து வருகின்றேன்.

இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனம் என்னால் தயாரித்த கோவலன் கூத்தை ஒளிப்பதிவு செய்து வருடாவருடம் ஒளிபரப்புச் செய்து வருகின்றது.

1993ம் ஆண்டு யாழ்ப்பாணத்துக்கு இடமாற்றம் பெற்று வந்த போது யாழ்ப்பாணத்தில் பல கூத்துக்களைப் பார்த்தேன். இக் கூத்துக்களில் பாட்டுத்தான் முக்கியத்துவம் பெற்றதே அல்லாமல் ஆட்டம் இடம்பெறவில்லை என்றே கூறலாம். கிறிஸ்தவ சமயத்தவரால் கூத்துக்கள் பாடியே நடிக்கப்பட்டன. ஆடல் இல்லாமைக்கு சமய காரணங்களைக் கூறினர். ஆனால் கரையோரப் பிரதேசத்தில் ஆட்டத் துடன் கூத்துக்கள் இடம்பெற்றிருந்ததை மூத்த கலைஞர்கள் மூலம் உறுதி செய்து கொண்டேன்.

1993ம் ஆண்டு வன்னி - யாழ்ப்பாண கலைஞர்கள் இணைந்து 'கோவலன் கூத்தை' யாழ்ப்பாணத்தில் அரங்கேற்றினேன். கூத்தின் ஆட்டத்தையும் பாட்டையும் சுவைத்தார்கள். எனக்கு மேலும் உற்சாகத்தை தந்தார்கள். நான் யாழ்ப்பாணத்திலுள்ள கலைஞர்களை முழுக்க முழுக்கப் பயன்படுத்தி நானே அண்ணாவியார் வேலையையும் கவனித்து நெறியாள்கை செய்து 'கோவலன் கூத்தை' பலதரம் மேடையேற்றிப் பாராட்டுப் பெற்றேன். இதன்பின் கரையோரப் பிரதேச நாட்டுக்கூத்துக்களில் ஆட்டங்கள் படிப்படியாக இடம்பெற்றன. உற் சாகம் அடைந்த நான் 1993ம் ஆண்டு பாரம்பரிய மேம்பாட்டுக் கழகம் அமைத்து அதன் செயலாளராகக் கடமையாற்றி வருகின்றேன்.

நாட்டுக் கூத்தில் அடிவைத்து வெற்றிக் கொடி கட்டிய எனக்கு இசை நாடகம் செய்யவேண்டுமென்ற ஆவலால் 'சத்தியவான் சாவித்திரி' இசை நாடகத்தில் சத்தியவானாக நடித்து முதல் மேடை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யிலேயே பாராட்டைப் பெற்றேன். தொடர்ந்து இசை நாடகங்களில் முக்கிய பாத்திரங்களை ஏற்று நடித்து வருகின்றேன். பொதுவாக கூறுவதாயின் நாடகத்துறையில் எனது பங்களிப்பையோ என்னைப் பற்றியோ குறிப்பிட்டுப் பேசத்தக்கதாக இருக்குமானால் அது பிறந்து வளர்ந்த சூழலும் எனது ஆர்வமும் கலை உணர்வும் இறைவன் தந்த குரல், உடல் வளமும், மக்கள் ஆதரவும், ஊடகங்களின் ஆதரவும் இணைந்த ஒன்றுபட்ட காரணங்களால் ஏற்பட்டதே எனலாம்.

நோக்கம் இல்லாத கலைஞனின் தொண்டு தண்ணீரில் எழுதிய எழுத்துக்களைப் போன்றது. இலங்கைத் தமிழர்களின் கலை வடிவத்தை பிரதிபலிக்கும் ஒரேயொரு கலைவடிவம் நாட்டுக்கூத்து ஒன்று தான். அந்த அசையாத எண்ணக்கருவினால் உந்தப்பட்ட நான் நாட்டுக்கூத்தைப் பாதுகாக்க வேண்டும் என்ற கடமைப்பாட்டினால் தமிழினத்துக்குச் செய்யும் பெரும் பணியாகக் கருதி நாட்டுக்கூத்தைப் பாதுகாத்து அடுத்த சந்ததியினருக்கு கையளிக்கும் பணியில் நடிகனாகவும், தயாரிப்பாளனாகவும், நெறியாளனாகவும், மேடையேற்றும் ஒழுங்கமைப்பாளனாகவும் பணிபுரிகின்றேன். இதுவே நான் நாடகத் துறைக்குப் பிரவேசிக்க முக்கிய காரணமாகும் என்பதை மகிழ்வுடன் கூறிக்கொள்ள விரும்புகின்றேன்.

**2. வேழம்படுத்த வீராங்கனை ஆட்டக்கூத்தில் நீங்கள் ஏற்படுத்திய புதுமை மற்றும் உத்திகள் பற்றி விளக்குவீர்களா?**

நான் இற்றை வரை நெறியாள்கை செய்து அரங்கேற்றிய நாட்டுக் கூத்துக்கள் அத்தனையுமே மக்களின் ஏகோபித்த பாராட்டைப் பெற்றன. ஆனால் "வேழம்படுத்த வீராங்கனை" ஆட்ட நாட்டுக்கூத்து நாம் எதிர் பார்த்ததிலும் அமோக வெற்றியை ஈட்டித் தந்துள்ளது. இதனால் நீங்கள் கூறும் புதுமை என்ற சொற்பதத்தை ஏற்றுக் கொள்ள வேண்டும் போலுள்ளது. ஆனால் நாங்கள் மரபு வழியில் இருந்து தவறி எந்தப் புதுமையினையும் செய்யவில்லை. இற்றை வரை இடம்பெற்ற நாட்டுக்கூத்துக்களில் இருந்து வித்தியாசமான ஒரு கூத்தாக பார்வையாளருக்கு இருப்பதனால் அதனைப் புதுமை என்று கூறுவதிலும் பிழை இல்லை எனலாம்.

நாடக நெறியாளர்கள் அரங்கைப் பல கோணங்களில் பயன் படுத்திக் கொள்வார்கள். எல்லோருடைய நோக்கமும் இரசிகர்களின் சிறப்பான விசேடமான பாராட்டைப் பெற வேண்டும் என்பதுதான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதனால் மேடையில் ஆற்றுகை செய்யும் நடிகர்களின் உச்ச வெளிப்பாட்டை அளித்து இரசிகர்களின் மனோநிலைக்கு ஏற்ப இரசிக்கும் உச்சரசிப்புத் தன்மையைப் பெறுவதற்கு மரபுவழி தவறா வண்ணம் தயாரித்து நெறியாள்கை செய்த ஒரு கூத்தே "வேழம்படுத்த வீராங்கனை" ஆட்ட நாட்டுக்கூத்தாகும். பெரும்பான்மையான கூத்துக் களில் பின்வரும் பின்னடைவுகள் என்னால் உணரக் கூடியதாக இருந்தது. அவையாவன

1. வயது போன கலைஞர்களைக் கொண்டு வந்து மேடையேற்று வதனால் பாடடுக்கள் விளங்க வழியில்லை. இளைஞர்கள் ஏளனம் செய்து விசிலடித்து தமது வெறுப்பை காட்டுவர்.
2. நாடகத்தொடர்ச்சி இருப்பதில்லை. இடைவெளி அதிகமாக இருக்கும்
3. பாத்திரத்திற்கு ஏற்ற தோற்றம் இருப்பதில்லை.
4. ஒரே ஆட்டமே தொடர்ந்து இருப்பதால் மக்கள் சலிப்படைந்திடுவர்.
5. ஒரே ராகத்தில் கூடுதலாகப் பாடுவதை மக்கள் விரும்புவதில்லை.
6. பெரும்பாலான நாட்டுக்கூத்துக்கள் பொது மேடைக்கு வரும் போது பெண்களே ஆண் பாத்திரத்தையும் ஏற்று நடிக்கிறார்கள். இதனால் ஆண்களது ஆண்மையான நடிப்பு இடம்பெறுவதில்லை.

மேற்கூறிய காரணங்களைத் தவிர்த்து வேழம்படுத்த வீராங்கனை ஆட்ட நாட்டுக் கூத்தை தயாரித்து நெறியாள்கை செய்தேன். இக் கூத்திலே கூடுதலாக இளம் வயதுடைய உயர்தர வகுப்பு மாணவர் களும், ஆசிரியர்களும் பங்கு கொண்டனர். பெண் பாத்திரத்துக்கு பெண்களே பாத்திரம் ஏற்று நடித்தனர்.

அண்மையில் கொழும்பில் மேடையேற்றிய பொழுது நுழைவுச் சீட்டு விற்பதற்கு ஒரு வீட்டிற்குச் சென்றிருந்தேன். அவர்கள் 'கூத்து இந்தக் காலத்தில் யாரும் பார்ப்பினம் என்றோ ரிக்கற் விற்க வந்தீர்கள்? எங்களுக்குப் பார்க்க விருப்பமில்லை. நீங்கள் வந்து விட்டீர்கள் சரி, ரிக்கற்றைத் தாருங்கள் என்று ஆசிரியர் கூறினார்' சரி எனக்காக எடுங்கோ, அதே போல் எனக்காக வந்து பாருங்கோ எனச் சொல்லி வந்து விட்டேன். நாட்டுக் கூத்து முடிந்தது. அதே ஆசிரியையும் குடும்பத்தாரும் என்னிடம் வந்து பாராட்டுத் தெரிவித்து விட்டு சொன்னார்கள், இப்படியொரு கூத்தை நான் பார்க்கவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்கட ஆட்டத்தோட பரத நாட்டியமே நிற்காது. நான் தெரியாமல் முந்திச் சொன்னதெல்லாம் மறந்து விட்டு எங்களுக்குப் பழக்கி விடுகின்றீர்களா? என என்னைக் கேட்டார்.

திருகோணமலையில் எனது கூத்து இடம்பெற்றபின் தபோதன இல்லத்தின் பொறுப்பாளர் கூறினார். நாட்டிய நாடகம் போல் இருந்தது. எங்கட பிள்ளைகளுக்கும் பழக்கி விடுங்கள். நான் முழுச்செலவையும் பொறுக்கின்றேன் என்றார்.

வவுனியாவில் நான்கு காட்சிகள் மேடையேற்றிய பின்னரும் ஐந்தாவது காட்சியையும் மேடையேற்றும் வண்ணம் அடம்பிடித்தார்கள். இவையெல்லாவற்றையும் நோக்கும் போது எமது வேழம்படுத்த வீராங்கனை நாட்டுக்கூத்து புதுமை ஒன்று தான் இருக்கிறது என்பதை அறியக் கூடியதாக இருக்கிறது.

இக்கூத்திற்கு பாத்திரங்களை பாத்திரப் பொருத்தப்படி தெரிவு செய்தேன். ஆடவும் பாடவும் தெரிந்த குரல், உடல் வளமுள்ள பாத்திரங்களையே தெரிவு செய்தேன். நானே தயாரித்து நெறியாள்கை செய்து ஆட்டப் பயிற்சியும் கொடுத்ததனால் நான் நாட்டுக்கூத்து அனுபவங்களினால் பெற்ற முழுப் பயன்பாட்டையும் பயன்படுத்தி எண்ணிய காட்சியை, வெளிப்பாட்டை வெளிக்கொணர முடிந்தது. பெரும்பாலும் தற்காலத்தில் நாட்டுக்கூத்துக்கள் வடமோடிக் கூத்தாகவோ, தென்மோடிக் கூத்தாகவோ வேறு வகைகளுக்கு அடங்கும் கூத்தாகவோ வேறுபடுத்தப்பட்ட முறையிலே அரங்கில் ஆற்றுகைப் படுத்துவது வழக்கமாக உள்ளது. பிரதேசத்திற்குப் பிரதேசம் வேறுபட்ட ஆட்டமுறைகளும் பாடல் முறைகளும் அமைந்துள்ள வேளையில் இவற்றிற்குட்படாது ஆட்ட நாட்டுக்கூத்து என்ற பெயரில் முல்லைத்தீவு பிரதேச ஆட்ட முறைகளும் வடமோடி, தென்மோடியிலுள்ள விறுவிறுப்பான ஆடல் பாடல்களையும் புகுத்தி வேழம்படுத்த வீராங்கனை கூத்தை அரங்கேற்றினேன். இது நான் செய்த புதுமையாகும். இம்முறையை யாரும் கண்டிக்கவும் முடியாது.

ஆரம்பத்தில் ஆடிப்பாடி குந்தி மிதித்து தமது சந்தோசத்தை மக்கள் வெளிப்படுத்தினர். இவ்வகையான ஆடல்கள் கூத்தாகி கூத்துக்கள் மூலம் புராணக்கதைகள் ஊடாக மக்களுக்கு உபதேசம் செய்யப்பட்டன. அவர்கள் மோடி வகைப்படுத்தி ஆடியதாக எந்த வரலாறும் இல்லை. ஆனால் கல்விமான்கள் கூத்தினை ஆய்வு செய்யும் பொழுது குழுக்களிடையே ஆடப்பட்ட கூத்துக்களின் ஆட்ட முறையில் வேறுபாடுகளைக் கண்டு மோடி வகைப்படுத்தினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே மோடி வகைகளுக்குள் அடங்கி கூத்து ஆட வேண்டும் என யாரும் இலக்கணம் கூறி கட்டாயப்படுத்த முடியாது. எனவே தான் ஜனரஞ்சகமான முறையில் நாட்டுக் கூத்தை மரபுவழி தவறாத வண்ணம் ஆட்ட முறையில் சிறந்தவற்றைப் பழகி, பழக்கியுள்ளேன். அது தான் பெரும் வெற்றிக்குக் காரணமாகும். அதைத்தான் புதுமை என்றும் கூறியுள்ளார்கள் என நினைக்கின்றேன்.

முல்லைத்தீவுப் பகுதியில் உள்ள கோவலன் கூத்திலுள்ள வஞ்சிப்பித்தனுடைய ஆட்டம் முல்லைத்தீவுப் பிரதேசத்துக்கு மட்டு முள்ள சிறப்பான ஆட்டமாகும். அந்த ஆட்ட முறையினை ஏழு பணக்கர்களுக்கும் பழக்கி அவர்கள் ஆடும் போது மக்களைக் கொள்ளை கொள்ள வைத்தது என்று முக்கியமாகக் கூறலாம்.

**3. 45 வயதிற்குப் பின்னர் தான் மரபுக் கலையில் ஈடுபட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளீர்கள். இருப்பினும் தங்களுடைய மரபுக் கலை முழு வீச்சுப் பெறுவதற்குக் காரணமானவர்கள் பற்றி.........**

இக்கேள்விக்கு ஏற்கனவே ஓரளவு பதில் கூறியிருந்தேன். எனது கலைப்பணியினால் ஏற்பட்ட அனுபவம் வாயிலாகக் கூறுவ தாயின் வயது என்பது கலை ஆர்வத்தினால் உந்தப்பட்டு ஆற்று கையில் ஈடுபடுவதற்கு தடையாக இருக்காது என்பது எனது தாழ் மையான அபிப்பிராயம் ஆகும்.. ஏனெனில் 45 வயதின் பின் ஆடலையும் பாடலையும் பயின்று ஆடும். போது இளைஞர்களே என்னோடு ஆட முடியாது நிற்கின்றார்கள் என்றால் இதற்கு மேலும் நிரூபனம் தேவையில்லை என்று நினைக்கின்றேன்.

இன்னும் விபரமாகக் கூறுவதாயின் எனது செயற்பாட்டை கூறுவதின் மூலம் தெரிந்து கொள்ளலாம். கிராமத்தில் கூத்து என்றால் எந்த நிகழ்ச்சியையும் தவறவிடுவதில்லை. கலைஞர்கள் ஆடும் போது நுட்பமாகப் பார்ப்பேன். பாடும் போது ராகங்களை கிரகித்து கொள்வேன். அவர்கள் ஆடும். ஆட்டங்களை வீட்டில் சென்று ஆடிப்பார்ப்பது வழக்கம். பாட்டுக்களைப் பாடிப் பார்ப்பது வழக்கம். தெரிந்த கலைஞர்கள் குடிசையில் வாழுந்தவர்கள் ஆக இருந்தாலும் சாக்குப் போட்டு இருந்து அவர்களிடம் அளவளாவி அவர்களிடம் இருந்து வித்துவத்தைக் கற்றுக் கொள்வேன். அவ்வாறு பல ஆட்டமுறைகளைக் கற்ற தனால் பல இளைஞர்களுக்கு ஆடல் முறையை கற்றுக் கொடுக்கக் கூடியதாக இருக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"எதையும் என்னால் முடியும் என்ற அபார நம்பிக்கையை மனதில் இருத்தி இருந்தேன். அதுதான் எனது வெற்றிக்கு மூல காரண மாகும். அத்துடன் மற்றவர்களிலும் பார்க்க திறமையாக ஆடவேண்டும் என்ற ஆர்வமே எனக்கு தூண்டுகோலாக இருந்தது. இதனால்தான் இக்கேள்வியை கேட்கும் அளவுக்கு ஆட்டத்தையும் நடிப்பையும் ஆற்றுகின்றேன் என்பேன்."

**4. மரபுவழிக் கலைகளில் அண்ணாவிமாருடன் உங்களுக்குள்ள தொடர்புகள் பற்றி விளக்கிக் கூறுவீர்களா?**

எனது அடிப்படை நோக்கம் பாரம்பரிய கலைகைள் பாதுகாக்கப் பட வேண்டும் என்பதுதான். இந்நோக்கத்தினால் உருவானதே ஏனைய நடவடிக்கைகள் ஆகும். நான் ஓரளவு யதார்த்தமாக எதையும் சிந்திப்பேன். மேடைகளில் எமது 'பாரம்பரிய கலைகள் எப்போதும் அழியாது' என்று பேசிவிட்டுப் போகலாம். ஆனால் மரபுவழிக் கலைகளில் பல அழிந்து விட்டது என்பது எனது உறுதியான கூற்றாகும். நான் கடந்த இருபது வருடங்களாக பாரம்பரிய கலைகளைப் பாதுகாக்கும் முயற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின் றேன். வெளிக்கள ஆய்வு முயற்சியில் யாழ்ப்பாண மாவட்டத்தின் மூலை முடுக்குகளுக்குச் சென்று அதாவது நெடுந்தீவு தொடங்கி மருதங்கேணி பளை வரை ஆய்வு செய்துள்ளேன். முல்லைத்தீவு மாவட்டம் முழுவதும் மேலும் உடப்பு, நீர்கொழும்பு, புத்தளம், திருமலை, மலைநாடு சென்று ஆய்வு செய்துள்ளேன். எத்தனையோ கலைவடிவங்கள் நாட்டார் பாடல்கள் அழிந்தொழிந்து விட்டன. எத்தனையோ மரபுவழிக் கலைச் செல்வங்கள் சிதைந்துவிட்டன. வாய் மொழியாக செவிக்கினிதாக பொருள் செறிந்து கமழ்ந்த நாட்டார் பாடல்கள் தனது சொந்த ராகத்தை இழந்து சினிமாப் பாடல் இசைகளையும் கர்நாடக சங்கீத இசைகளையும் பெற்று சோகையிழந்து காணப்படுகிறது. இன்று மரபு கெடாத நாட்டார் பாடல்களை அம்மா மாரிடம், அப்பாக்களிடம், அண்ணாவிமாரிடம் கேட்பதற்காக துவண்டு துவண்டு தேடும் பொழுது அது அழிந்து கிடப்பதைக் கண்டு மனம் நொருங்குகின்றது. எஞ்சியவை மிஞ்சியவையாக கொஞ்சிக் கொஞ்சி அணைப்பவையாக கெஞ்சிக் கெஞ்சிக் கேட்பவையாக மரபு வழிக் கலைகளுடைய பொக்கிசத்தாரிடம் தஞ்சமடைகின்றேன்.

அந்த வகையில் நாட்டுக்கூத்து அண்ணாவிமார்களை அணுகுகின்றேன். எஞ்சியிருப்பவர்கள் ஒரு சிலர் தான். அவர்களும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வயதில் முதிந்தவர்கள் தான். இவ்வளவு காலமும் கலைக்காகவே எமது வாழ்வில் பெரும் பகுதியை செலவழித்தோம். ஆனால் எமது கலைப்பங்களிப்பை இந்த உலகம் கவனிக்கவில்லையே. எமது கலைப் பங்களிப்பு வீட்டுக்குள் மட்டும் தான் உள்ளது. மனைவியின் ஏச்சுக்கும் ஆளாகியது தான் மிச்சம் என்று எத்தனையோ கலைஞர்கள் என்னிடம் தமது ஏக்கத்தைத் தெரிவித்தனர். பல பெரியவர்கள் எல்லாம் தம்மைக் கொண்டு கூத்தைப் பழகிவிட்டு இசை நாடகத்தைப் பழகிவிட்டு பழக்கியவர்கள் தாமே என பெயர் பொறிக்கின்றனர் என்றார்கள்.

நான் நடிகன். எனவே அவர்கள் ஏக்கத்தில் பல உண்மைகள் இருப்பதனைக் கண்டேன். அதனால் நான் தற்பொழுது வசிக்கும் யாழ்ப்பாண மாவட்டத்தில் வாழ்ந்து கொண்டிருக்கும் 35 மூத்த கலைஞர்களின் வரலாற்றை அவர்களிடம் செவ்வி கண்டு அவர்கள் வரலாற்றை நூலாக உலகுக்கு எடுத்துரைத்தேன். அவர்களுக்கு பொன்னாடை போர்த்திக் கிரீடம் அணிவித்து கௌரவிக்க வழி செய்தேன். அவர்களின் சந்தோசத்தில் நானும் பங்கு கொண்டேன். எனக்குப் பின்னனியில் பலர் உதவினார்கள். இவ்வளவும் செய்வதற்கு எந்த அமைப்புக்களும் எமக்கு எதுவித உதவியும் செய்யவில்லை. மக்களோடு மக்களாக நின்று இந்தப் பெருங்காரியத்தை எனது குழுவினருடன் சேர்ந்து முன்னெடுத்துச் சென்றேன்.

அதன்பின் இளைஞர்கள் நாடகம் நடிப்பதற்கு முன்வந்தார்கள். தாமும் இத்துறையில் ஈடுபட்டால் தங்களுக்கும் ஒரு கௌரவம் கலை உலகில் கிடைக்கும் என்ற நம்பிக்கையை அவர்கள் பெற்றுள்ளனர்.

நாட்டுக்கூத்து, இசைநாடகம், ஒயிலாட்டம், வசந்தன் ஆட்டம், கரகம், காவடி என்பவற்றை நானே பயின்றேன். மேடையில் ஆடி அரங்கேற்றினேன்.

வெறுமனே மேடையேற்றத்துடன் நின்றுவிடாது போட்டிகள் வைத்து பரிசுகள் அளித்து 1000 கலைஞர்களுக்கு மேல் கடந்த மூன்று வருடங்களுக்குள் மரபுக் கலைக்குப் பங்களிப்புச் செய்ய முன்னின்று உழைத்தேன்.

வேறு பல கல்விமான்கள் செய்தது போல நாட்டார் பாடல் தொகுதி, நாடகத் தொகுதி, இலக்கிய வரலாற்றுத் தொகுதி நூல்களை எழுதி சாகித்ய பரிசுகளையும் பெற்று அரச அங்கீகாரத்தையும் பெற்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் முயற்சி தொடர்கின்றது. உடலில் உயிர் தாண்டவமாடும் வரையும் எனது பங்களிப்புத் தொடரும் என்பதனைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன். எனவே நாடகங்களைத் தயாரித்து மேடையேற்றியதோடு மரபுக் கலைகளுக்கான நூல்களை எழுதியதோடு ஆய்வுக் கட்டுரைகளை எழுதியதோடு ஒரு நடிகனாகவும், நெறியாள னாகவும், தயாரிப்பாளனாகவும், ஒழுங்கமைப்பாளனாகவும் பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக் கழகம் என்ற அமைப்பின் அமைப்பாளராகவும், செயலாளராகவும் செயற்பட்டு வருகின்றேன். ஒரு திணைக்களத்தின் அதிகாரியாக இருந்து கொண்டு எனது பொறுப்பான வேலையிலும் சோகை விடாது நல்ல பெயருடன் சேவை செய்வதுடன் மிஞ்சுகின்ற நேரத்தில் செய்யும் பெறுமதியான இம் முயற்சியினால் உங்கள் மனத்தில் இந்த அபிப்பிராயம் தோன்றலாம் என நினைக்கின்றேன். அண்ணாவிமார்கள் நன்கு உணர்ந்துள்ளார்கள். எனது புனிதமான சேவைக்கு அவர்கள் தோளோடு தோள் கொடுத்து எந்த நேரமும் உதவுவதற்கு தயாராக இருக்கின்றார்கள். இதனால் நீங்கள் கேட்ட கேள்வியிலுள்ள அபிப்பிராயம் தோன்றலாம் என நினைக்கின்றேன்.

**5. கல்வித்துறையில் இருந்து நாடகத்துறையில் அடிவைத்து பல இளந்தலை முறையினரை ஊக்குவித்துப் பயிற்சி கொடுத்து ஆற்றுகை கலை வெளிக் கொணர்கின்றீர்கள். இவற்றின் போது உங்களுக்கு ஏற்பட்ட அனுபவங்களைத் தெரிவிப்பீர்களா?**

நான் கடமையாற்றும் கல்வித் திணைக்களத்திற்கும் எனது கலைப்பணி முயற்சிக்கும் மிகவும் ஒருமைப்பாடு உள்ளது. எனது எண்ணங்கள் நிறைவேற்றுவதற்கு நான் பணி புரியும் கல்வித் திணைக்களத்தின் தன்மையும் எனது பொறுப்பான பதவியும் பல விதத்தில் உதவி புரிந்துள்ளது என்பதனை நான் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

எமது கல்வித் திணைக்களம், மாணவர்களின் நலனுக்காக பணிபுரியும் காரியாலயமாகும். மாணவர்களுக்கும், கல்வித் திணைக் களத்திற்கும் இடையிலான தொடர்பாளர்களாக அதிபர்கள், ஆசிரியர் கள் இருக்கின்றனர். அதிபர். ஆசிரியர்கள் பணி சிறக்க வேண்டு மானால் அவர்களுடைய நிர்வாக நிதி வேலைகளை காரியாலயம் செய்து கொடுக்க வேண்டும். எனவே பொறுப்பு வாய்ந்த பதவியில் உள்ள நான் அதிபர், ஆசிரியர்களிடம் நன்மதிப்பு பெற்றவனாக இருந்ததனால் எனக்கு அதிபர், ஆசிரியர்கள் அவர்கள் மூலம் மாணவர்கள் ஆகியோருடைய ஒத்துழைப்புக் கிடைத்து வருகின்றன. அவர்கள் ஒத்துழைப்பை கலைப்பணிக்கு அர்ப்பணித்து கொண்டேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதனால் விழாக்கள் செய்வதற்கோ கூத்து, நாடகங்கள் மேடையேற்றுவதற்கோ நடிகர்களை தேர்ந்தெடுப்பதற்கோ முழுமையான ஒத்துழைப்பு கிடைத்தது. ஏற்கனவே கூறியபடி அண்ணாவிமார்களின் ஒத்துழைப்பை பெற்ற நான் அவர்கள்மூலம் அதிபர், ஆசிரியர்களின் உதவியுடன் மாணவர்களை மரபுக் கலைக்குள் புகுத்துவதற்கு மறைமுகமாக கூறின் இளஞ்சந்ததியினரிடம் மரபுக் கலையை கையளிக்க எடுத்த, எடுக்கும் முயற்சியை நடைமுறைப்படுத்தக் கூடியதாக இருந்தது, இருக்கிறது.

பெரும்பான்மையான அதிபர், ஆசிரியர்கள் நிதி உதவி செய்து எமது கழக முயற்சிக்கு ஆதரவு அளித்தார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

**6. இலங்கையில் கலைத்துறையில் நீங்கள் கௌரவம் பெற்ற மனித ராக விளங்குகின்றீர்கள். இது பற்றிய உங்கள் அபிப்பிராயம் என்ன?**

'கௌரவம்' என்பது காசுக்குப் பெறமுடியாது. கேட்டுக் கொடுப்பதும் இல்லை. உண்மையான சேவையாளன் கௌரவத்தை எதிர் பார்த்து சேவை செய்வதும் கிடையாது. என்னைப் பொறுத்த வரையில் நான் பேசும் மொழி, வாழும் சமூகம், சமுதாயம் இனம் என்பவற்றுக்கு தேவை கருதி கலைப்பணியை செய்து வருகின்றேன். கட்டிடம் உடையலாம். திரும்பிக் கட்டலாம். உடையலாம் மீண்டும் கட்டலாம். ஆனால் இன்று வாழ்ந்து கொண்டிருக்கும் மரபுக் கலைக் கலைஞர்கள் ஒரு சிலரே வாழ்கின்றார்கள். அவர்கள் இறந்தால் கலையும் இறந்து விடும். அவர்கள் இறப்பதற்கு முன்னதாக அவர்கள் மூலம் இளஞ் சந்ததியினருக்கு ஏதாவது சொல்லிக் கொடுக்க வேண்டும். அவர்களின் கலைத்துவம் ஒளிப்பேழையில் வைத்திருக்க வேண்டும். நாட்டுப் புறப் பாடல்கள் கூத்து, இசை நாடக பாடல்கள் மரபு வழி தவறாத இராகத்துடன் ஒளிப் பேழையில் பதிவு பண்ண வேண்டும். பாடல்கள் வெறுமனே நூலுருவில் வந்தால் மட்டும் ஒருவித பிரயோசனமும் கிடையாது.

எனவே தான் மேற்கூறப்பட்ட சகல முயற்சிகளிலும் மும்முர மாக ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றேன். இற்றை வரை எதுவித பணமும் எமக்கு வெளிநாட்டிலிருந்து கிடைக்கவில்லை. நாமும் எவரிடமும் தொடர்பு வைக்க முடியவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே இவ்வாறு சேவை செய்யும் ஒருவருக்கு எவராக இருந்தாலும் கௌரவம் தாமாகவே கிடைப்பதை யாரும் தடைசெய்ய முடியாது என்று நினைக்கின்றேன். அந்த வகையில் அண்மையில் "தமிழ்க்கலைக் காவலன்" என்னும் பட்டம் வழங்கி கௌரவமும் ஆளுனர் விருது கௌரவமும் கிடைத்துள்ளது.

**7. ஒவ்வொரு கலைஞனுக்கும் ஒரு கனவு உண்டு. குரலாலும், உடலாலும் அரங்கில் வியாக்கியானித்து நிற்பது மட்டுமன்றி நெறியாள்கை, தயாரிப்பு, ஆய்வு என்பன போன்ற பணிகளிலும் ஈடுபட்டுள்ளீர்கள். மரபு வழி அரங்கு தொடர்பாக உங்களிடம் உள்ள கனவு என்ன என்று சொல்ல முடியுமா?**

ஏற்கனவே மரபுக் கலையின் மகிமைகளையும், நாட்டுக் கூத்தின் முக்கியத்துவத்தையும் கூறியிருந்தேன். மரபுக் கலைகளைப் பாதுகாக்க செயற்படும் அமைப்புக்களோ, தனிப்பட்டவர்களோ பாது காக்கும் பணியில் மும்முரமாக ஈடுபட்டிருந்தால் நான் பக்கத் துணையாக இருந்து செயற்பட்டிருப்பேன். அவ்வாறு ஒருவரும் மும்முர மாக ஈடுபட்டுக் கொண்டிருக்கவில்லை.

எனவே மரபுக் கலைகளைப் பாதுகாக்க அமைப்பை உரு வாக்கி எனது செயற்பாட்டை தீவிரமாக்கி பல எண்ணக் கருக்களை உருவாக்கி பல திட்டங்களைத் தீட்டி நல்ல விளைவுகளைப் பெற வேண்டும் எனக் கனவு கண்டேன்.

அந்தக் கனவை நனவாக்குவதற்காகவே மூத்த கலைஞர் களின் வரலாறு வெளிக் கொணரப்பட்டதும், அவர்களுக்கு கௌரவம் அளித்தும் இளைஞர்களை நாடகத்தில் மரபுக் கலைகளில் பயிற்று வித்தும், சிதைந்த பாடல்களை நூல் உருவில் கொண்டு வந்ததும் தொடர்ந்து கலைஞர்களுக்கு கௌரவம் அளிப்பதும், போட்டிகளை வைத்து பரிசில்கள்வழங்கி கௌரவிப்பதும், எனது வயது 57 ஆக இருந்த போதும் இளைஞர்களுடன் சேர்ந்து நடித்து அவர்களுக்கு உந்து சக்தியாக நிற்பதுமாகும்.

எனது கனவுகள் கனவாகவே இல்லாது நனவாகுவதைக் கண்டு பெருமகிழ்ச்சி அடைகின்றேன். எனக்குப் பின்னால் மரபுக் கலை சார்ந்த கலைஞர்கள் பின்னின்று ஒத்துழைப்புத் தருகின்றார்கள். அண்ணாவிமார்கள் உற்சாகமளித்து தமது முழுமையான பங்களிப்பைத் தருகின்றார்கள். நிகழ்வுகளைச் செயற்படுத்த மக்கள் ஆதரவு தருகின்றார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனினும் பெரியவர்கள் சிலர் பாராட்டித் தட்டிக் கொடுக்க வேண்டியவர்கள் பொறாமை கொள்கின்றனர். பல பெரியவர்கள் பாராட்டி பக்க பலமாக இருக்கின்றார்கள். என்னைப் பொறுத்தளவில் எந்தக் கழகங்களுக்கோ, நிறுவனங்களுக்கோ தனிப்பட்ட துறை சார்ந்த பெரியவர்களுக்கோ போட்டியாக எதையும் செய்யவில்லை. கலைக்கு என் பங்கை மட்டும் நான் செய்கின்றேன். இத்துறை சார்ந்த எந்தக் குழுவுக்கும் தனிப்பட்டவர்களுக்கும் என்னால் ஆன உதவிகளையும் செய்து அவர்களுக்கு எனது பாராட்டுதல்களையும் வழங்க திடமாக இருக்கின்றேன். எனது கனவு நனவாக வேண்டுமானால் துறைசார்ந்த பெரியவர்களும் - அமைப்புக்களும், கலைஞர்களும் புதிய புதிய முயற்சிகளில் ஈடுபட்டு காத்திரமான செயற்பாடுகளைச் செய்ய வேண்டும். என்னால் முழுமையாகச் செய்ய முடியாது என்பதும் எனக்குத் தெரியும். எனவே மரபுக் கலையை வளர்க்க கலைஞர் களிடையே பொறாமை, காழ்ப்புணர்ச்சி, தலைக்கனம் அற்றவர்களாக இத்துறை சார்ந்தவர்கள் இணைந்து செயற்பட வேண்டும் என அன்பாக கேட்டுக் கொள்கின்றேன்.

அண்மையில் யாழ்ப்பாணத்திலிருந்து 35 கலைஞர்கள் எனது தலைமையில் கொழும்பு சென்று இருந்தோம். யாழ்ப்பாணத்தில் வாழ முடியாது பலர் இடம்பெயர்ந்து யாழ் மாவட்டத்திற்கு வெளியேயும், வெளிநாட்டுக்கும் சென்றுள்ளார்கள். ஆனால் நாம் பல துன்பங் களுக்கும், கட்டுப்பாடுகளுக்கும் மத்தியில் வாழ்ந்து கொண்டு பல கஷ்டங்களை அனுபவித்துக் கொண்டு இருந்தும் கூட எமது மரபுக் கலை அழியக்கூடாது அதை காப்பாற்ற வேண்டுமென உறுதிபூண்டு செயற்பட்டுக் கொண்டிருக்கின்றோம்.

இந்தச் செயற்பாட்டின் விளிம்பில் நின்று கொண்டு கொழும்பு, திருகோணமலை, வவுனியா சென்று நிகழ்வை நடாத்தினோம். கொழும்பில் தமிழ் வளர்க்கும் சங்கங்களோ, கழகங்களோ யாழ்ப் பாணத்திலிருந்து வந்து முத்தமிழில் ஒன்றான நாடகத் தமிழை வளர்க்க வந்த கலைஞர்களுக்கு வரவேற்று வார்த்தை கூட தெரிவிக்க வரவில்லை என்றால் இவர்களின் அடிமனதில் எது உள்ளது என்பது கேள்விக்குறியாக இருக்கிறது. அதேவேளை கொழும்பு விவேகானந்தா கல்லூரி அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், றோயல் கல்லூரி மாண வர்கள் எமக்கு அளித்த ஒத்துழைப்பு எம்மை உற்சாகம் ஊட்டியது. இவர்களைப் போல் எமது முயற்சிக்கு ஆதரவு கிட்டுமானால் எனது கனவு மிகவிரைவில் நனவாகும் என்பதில் ஐயமில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ் மாவட்டத்தை பொறுத்தளவில் என கனவு நனவாகி வருவதையிட்டு மகிழ்ச்சி அடைகின்றேன். வாழும் இடம் தெரியாமல் இடம்பெயர்ந்து துன்பப்பட்டுக் கொண்டு இக்குடா நாட்டுக்குள்ளேயே வாழும் மக்கள் கிழமைக்கு ஒரு இசை நாடகத்தை, கூத்தை ஏதாவது ஒரு மூலையில் அரங்கேற்றி மக்களுக்கு சந்தோசத்தை கொடுப்பதுடன் மரபுக் கலை வளர்ச்சிக்கும் பணியாற்றி வருகின்றார்கள். கலைவிழா, பாடசாலை நிகழ்வுகளில் மரபு வழிக் கலைநிகழ்ச்சிகளை நடாத்துவதும் பல இளைஞர்கள் எம்முடன் தொடர்பு கொண்டு கூத்து, இசை நாடகம், ஓயிலாட்டம் போன்ற நிகழ்ச்சியில் பங்கு கொள்ள விருப்பம் தெரிவித்ததும் எமது கனவு நனவாகின்றது என்பதற்கு கட்டியம் கூறுவனவாகும்.. இது எனது ஆரம்ப முயற்சிதான் மேலும் பல திட்டங்கள் தீட்டியுள்ளோம். அவை செயற்படும் இடத்து எமது கனவு நனவாகும் என்பதில் ஐயமில்லை. கூத்தைப் பொறுத்த வரையில் நான் முன்னின்று உழைத்து வருகின்றேன். மேலும் பல தயாரிப்புக்களை உருவாக்கியுள்ளேன். மேலும் பல இளைஞர்களை இணைத்து அவர்களை பயிற்றுவிக்கவும் உள்ளேன். மக்களை நாம் கவர்ந்துள்ளோம். எங்கள் புனித நோக்கத்தை மக்கள் புரிந்துள்ளார்கள். யாழ்ப்பாண மாவட்டத்தில் மட்டுமல்ல இலங்கையில் தமிழ் பேசும் பிரதேசங்களில் உள்ள மரபுவழிக் கலைகள் யாவும் பாதுகாக்கப்பட வேண்டும். பிரதேச வேறுபாடு இன்றி புரிந்துணர்வுடன் தன்னலமற்ற பணியுடன் கலைப் பணி புரிய கற்றுக் கொள்ள வேண்டும். நாம் எப்பொழுதும் சமநிலையில் நின்று போற்ற வேண்டியவர்களை போற்றி தூற்ற வேண்டியவர்களுக்கு ஆலோசனை வழங்கி ஒன்றுபட்டு உழைப்போம்.

நாடகத்துறை சார்ந்த நூல்கள் வெளியிடுவோர் மிகவும் அரிது. எழுதி வெளியிடுவோரை ஊக்குவிக்கும் கடப்பாடு ஊக்குவிப்பாளருக்கு முக்கிய பணியாகும். மரபுவழி நாடகங்களில் நடந்த வரலாற்று அனர்த்தங்களை மாணவர்கள் அறியக்கூடியதாக,நூலாக வழங்க வேண்டும் என்ற ஆவலில் சங்கிலியன், பூதத்தம்பி வரலாறு நாடகங்களையும் கர்ணபரம்பரைக் கதையான வெடியரசன் நாடகத்தினையும் "மண்வாசனையில் மூன்று நாடகங்கள்" என்ற நூல் மூலமாக எழுதி வெளியிட்டேன். துறைசார்ந்தவர்கள் அனைவருமே பாராட்டினர். ஊடகங்கள் மூலம் விமர்சனம் செய்து பெரிதும் போற்றினர். காலத்தின் தேவை அறிந்து வெளியிட்ட நூலாக கருதினர். வடக்கு கிழக்கு கல்வி கலாசார அமைச்சு இலக்கியப் பரிசிற்காக தேர்ந்தெடுத்து என்னை ஊக்குவித்தது. ஆனால் தேசிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டத்தில் பரிசு வழங்க குழு ஒன்று மறுத்து நாடகத்துறைக்கே பரிசு வழங்காத நூலினை, சிபார்சு செய்யாத நிலைப்பாட்டை அறிந்து வேதனையடைகின்றேன். எனது முயற்சியை யாரினாலும் மழுங்கடிக்க முடியாது. எனது கனவு நனவாகும் மட்டும் நாடகத்துறைக்கு என்னால் ஆன பங்களிப்பைத் தொடர்ந்து ஆற்றுவேன்.

கொழும்பில் தமிழ் வளர்ப்பதாக பறைசாற்றும் சில கழகங்கள் பல லட்சம் ரூபா செலுத்தி வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யும் கலைஞர்கள் மூலம் எமது தனித்துவமான கலாசார விழுமியத்தை காப்பாற்ற முடியாது. அது வெறும் பொழுது போக்கு முயற்சிதான். அவர்கள் இங்கிருந்து போனவுடன் காற்றோடு காற்றாக அந்நிகழ்வின் பலாபலனும் பறந்து விடும். எம்மிடம் சிறந்த கலைவளம் உண்டு. யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, முல்லைத்தீவு, மலையக மாவட்டம் சிறந்த படைப்புக்களை மேடையேற்றி உள்நாட்டுக் கலைஞர்களை ஊக்குவித்து கௌரவம் செய்வதுதான் கழகங்களின் இன்றைய தமிழ்ப் பணி என நான் நினைக்கின்றேன். இவ்வாறு இவர்கள் செய்வார்கள் என நினைக்கின்றேன். எனவே எனது கனவு மிக விரைவில் நனவாகிவிடும்.

மேலும் தமிழ் இனத்தின் விழுமியமான மரபுக்கலையைப் பாதுகாக்க வேண்டுமென்ற உணர்வுள்ள வெளிநாட்டு, உள்நாட்டு கழகங்களோ தனிப்பட்டவர்களோ "பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக் கழகம் சி - 12037 இரண்டாவது கிளை, இலங்கை வங்கி யாழ்ப்பாணம்" என்ற விலாசத்துக்கு தங்கள் அன்பளிப்பை வரவு செய்யலாம். அல்லது செ. மெற்றாஸ்மயில், 12/1 . முத்தவிநாயகர் வீதி, கச்சேரி நல்லூர் றோட், யாழ்ப்பாணம். என்ற விலாசத்துக்கு தங்கள் அன்பளிப்பை அனுப்பினால் அவர்களின் பெயரால் எமது செயற்பாட்டுத் திட்டம் ஒன்றினை செயற்படுத்தி அவர்களுக்கு அறிவிப்போம். எமது கனவு மரபு வழிக் கலையைப் பாதுகாத்து தமிழ் இனத்தின் கலாசார விழுமியத்தை காப்பாற்றுவது ஒன்றேயாகும்.

**வாழ்க தமிழ்! வளர்க தமிழ்!**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரங்கியலும் வாழ்வியலும்

-இராம ஜெயபாலன்-

அரங்கியலின் உயிர் எனச்சொல்லக் கூடியது நடிப்பு. இது இயற்கையாகவும் இருக்கலாம். அல்லது மிகைப்படுத்தப்பட்ட செயற்கை தன்மையுடையதாகவும் இருக்கலாம். இங்கே வேசம் போடுதல் எனப்படுவது ஒருவர் தனது இயல்பு நிலையை மறைத்து இன்னோர் பாத்திரமாக மாறுவதாகும்.

நடிப்பு எனப்படும் போது தனது பாத்திரத்துக்கு அமைவான பாவனை எனக் கொள்ளலாம். இங்கே போலிவேசம் நடிப்பு எனப் பார்க்கும் போது ஏமாற்றுத்தனம் எனக் கொள்ளலாம். இதில் தன்னைத்தானே ஏமாற்றும் நிலையும் உண்டு.

இனி வாழ்வியலுக்கும் அரங்கியலுக்குமிடையே மேற் குறிப்பிட்ட விடயங்களை ஆராயும் போது அரங்கியல் வாழ்வியலில் இருந்து பிறந்த நிழல்கள் அல்லது பிம்பங்கள் எனக்கொள்ளும் போது மேற்குறிப்பிட்ட விடயங்கள் நிழல்களாகவும், நிஜங்களாகவும் இரண்டிடத்தேயும் கலந்திருக்கும்.

முதலில் வாழ்வியலில் இருந்து அரங்கியல் பிறந்த வரலாற்றை சற்று பார்ப்போம். மனிதர்கள் குழுக்குழுவாக வாழும் காலத்தில் உண்ணுவது, உறங்குவது இனத்தைப் பெருக்குவது பொழுது போக்கிற்காக ஆடிப்பாடுவது அதன் வளர்ச்சி நிலைகளாகும். இவ்வாறு ஆடிப்பாடுதல், வேலைப் பளு ஏற்பட, குறைவடைய விசேட நிகழ்வு களில் இந்த ஆடல்பாடல் இடம் பெறத் தொடங்க இசை அரங்கியலானது. அத்துடன் அன்றைய காலகட்ட முக்கிய வரலாற்றுப் பதிவுகளை நினைவுபடுத்தும் ஊடகமாக அரங்கியலைப் பயன்படுத்த இது நாடகமாக பரிணமித்து பின்னர் நாடகம் பல காரணங்களால் மக்கள் முன் பிரபல்யமானது.

இவ்வாறு மனித வாழ்வுடன் இரண்டறக் கலந்து பிறந்த நாடகம், மனிதனை பல வழிகளில் மேம்படுத்த மாற்றமுறவைக்க உதவின. இதில் முற்போக்குவாதம் எனச் சொல்லப்படும் மாக்சீச வாதத்தின் பங்கு அளப்பரியது. அதாவது ஆரம்பகால மனிதன் தன் தேவைகளுக்கு வாழ்ந்து மடிந்தான். அதாவது அப்போது வாழ்வுக்காக இருந்த தேவைகள் மாறி தேவைகளுக்காக வாழ்வு என உரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாறியது. இதனால் வரட்டுக் கௌரவம், சாதி, சமயம் குலம் கோத்திரம் என மனிதர்கள் மனிதத்தை தொலைத்துவிட்டு வெறும் போலி வாழ்க்கை வாழ்ந்த காலத்தில், நிஜவாத அதாவது ஜதார்த்த வாத அடிப்படையில் பல உண்மைகளைப் புகட்ட உருவான அரங்கியல் மனித வாழ்வை ஒரேயடியாக இல்லாவிட்டாலும் படிப்படியாக போலித் தனங்களில் இருந்து மனிதனை மனிதனாக மாற்ற நாடகங்களும் திரைப்படங்களும் உதவின.

அதாவது மனித வாழ்வின் போலி வேசங்களையும் போலி நடிப்புக்களையும் அவர்களுக்கே உறைப்பாகப் புரியவைக்க அரங்கியல் ஆற்றிய - ஆற்றிக் கொண்டிருக்கும் பங்கு அளப்பரியது. அளவிட முடியாதது.

பொதுவாக மனிதர்கள் வாழ்வில் நடிப்பதில் தலைசிறந்த வல்லுனர்கள். எவ்வாறு சிரிப்பு உயிரினத்தில் மனிதனுக்கு மட்டும் உரித்துடையதோ அதேபோல் நடிப்பும் மனிதருக்கு இயல்பான உரித்துடையது.

இந்தவகையில் மனிதர்கள் வாழ்வில் நடிப்பது தவறில்லா விட்டாலும் பல்வேறு தளைகளில் கட்டுண்டு போலியாய் வாழ்ந்து தன்னையும் ஏமாற்றி பிறரையும் ஏமாற்றி அதுமட்டுமா? போட்டி, பொறாமை, சூழ்ச்சி என எல்லையில்லாது விரிந்து செல்லும் மனித முரண்பாட்டுச் சிக்கல்களையும் பிரச்சனைகளையும் வெளிக் கொணர்வதில் அரங்கியல் கணிசமான பங்கை ஆற்றுகின்றது.

இந்த வகையில் மனிதரால் இலகுவாய் புர்ந்து கொள்ளக்கூடிய கருத்தியல் நுகர்வு சமூகத்திலே காணப்படும் முரண்பாட்டுச் சிக்கல்களை கருக்களாகக் கொண்டு கதையை உருவாக்கி அதில் பாத்திரங்களைப் பாவனை செய்வதினூடாக நடிப்பை உயிர்த் துடிப்பாகக் கொண்டு அரங்கியல் மனிதனின் அக கண்களைத் திறந்துவிட பல வழிகளில் பங்காற்றுவது அரங்கியல் வாழ்வியலுக்கு ஆற்றும் அதி உச்சப் பயன்பாடாகும்.

ஆக அரங்கியல் என்பது வாழ்வியலுக்கு பலதரப்பட்ட கோணங்களில் நன்மை செய்கின்ற அதேவிடத்து, அரங்கியல் வாழ்வியலில் பல தாக்கங்களையும் தீய விளைவுகளையும் ஏற் படுத்தும் காரணிகளும் இல்லாமலில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரங்கில் வெளிப்பாட்டு வாதம் [EXPRESSIONISM]

திரு. இ. ரமேஸ்குமார்

அரங்க வெளிப்பாட்டு வாதம் என்பது இருபதாம் நூற்றாண்டின் முன்னைய இருபது ஆண்டுகள் கழிந்தே தோற்றம் பெற்றுக் கொள் வதனை நாம் அறிந்து கொள்ளலாம். இவ் அரங்க வெளிப்பாட்டு வாதத்தின் தொடக்கத்துக்கு ஓவியக் கலையே அடிகோலியது. அரங்க வெளிப்பாட்டு வாதத்தின்படி காட்சியில் காட்ட முடியாத அல்லது காட்சிப் புலத்துக்கு அப்பால் இருப்பவற்றை காட்ட வேண்டும் என்பதே பிரதானமாகக் காணப்பட்டது.

அரங்க வெளிப்பாட்டு வாதிகள் தங்களின் நிலைக்கு ஏற்றவாறு ஒழிவு மறைவு இன்றி மீள் படைப்பாக்கம் செய்ய வேண்டும் என வாதிட்டனர். இது மனித உளவியலோடும் உளவியல் கோட்பாட் டோடும் நெருங்கிய தொடர்பைக் கொண்டிருந்தது. முதலாம் உலகப் போரின் போது மக்களுக்கு மத்தியிலும் ஐரோப்பிய பிரதேசங்களிலும் அழிவுகளும் அவலங்களும் ஏற்பட்டன. இதனால் இவ்வளவு காலமும் மக்கள் புற உலகின் மீது கொண்டிருந்த நம்பிக்கையைத் தகர்த்தன. இதன் காரணத்தினால் மக்கள் அக உலகு பற்றிய தேடல்களை மேற் கொள்ளத் தொடங்கினர். இவ்வாறான அக உலகின் தேடலாகவே அரங்க வெளிப்பாட்டு வாதம் காணப்படுகிறது.

அரங்க வெளிப்பாட்டுவாத நாடகங்கள் யாவும் சமூகத்தை புதுமையாக மாற்றுவதில் அக்கறை கொண்டிருந்தன. இதனால் இவ்வகை நாடகங்கள் மக்களிற்கு ஏதோ ஒரு விதத்தில் கருத்தினை அல்லது செய்தியை வழங்குவதனைக் காண முடிகிறது. இவ்வகை நாடகங்கள் பெரும்பாலும் மனிதனின் அக மனப் போராட்டங்களையும் அதில் ஏற்படுகின்ற சிக்கல்களையும் உளநிலைகளில் ஏற்படும் பிறழ்வுகள் அல்லது முறிவுகளையும் ஒளிவு மறைவு இன்றி வெளிப்படையாகஅரங்கில் காட்டியதோடு மட்டுமல்லாமல் மனிதனுக்குள் இருக்கின்ற மானிடத்தைத் தேடுவதாக இது அமைந்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வகை நாடகங்கள் ஒரு குறிப்பிட்ட சூழலில் உள்ள மனிதனின் மனம் எவ்வாறு மாற்றம் உறுகின்றது என்பதனையே வெளிப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு அமையப்பெற்றது.

இந் நாடகங்களை முதன்முதல் படைத்தவராக கிடைத்த தரவின் அடிப்படையில் சுவீடன் நாட்டைச் சேர்ந்த "ஒகஸ்டிரின் பாக்" என்பவரே கருதப்படுகின்றார். மேலும் வெளிப்பாட்டு வகை நாடகங்கள் பின்னணித் தொடர்பு எதுவும் இல்லாது கனவுலகில் நடைபெறும் சம்பவங்கள் போலவே தனது நிகழ்வுகளை அமைத்து இருந்தது. அரங்க வெளிப்பாட்டுவாத நாடகங்களை எழுதிய சிறந்த நாடக ஆசிரியராக "பிராங்க் வெட்கைண்ட்" "ஜோட்ஜ் எய்ஸர்" "எர்னஸ் டோலா" போன்றோரைக் குறிப்பிடலாம்.

அரங்க வெளிப்பாட்டு வாதமானது முதன் முதலில் ஜெர்மன் நாட்டிலேயே தோற்றம் பெற்றது. பின்னர் இதன் தாக்கம் ஏனைய நாடுகளிலும் பரவமுற்பட்டது. குறிப்பாக அமெரிக்காவில் "எல்மர் ரைஸ்" "யூஜின் ஓநில்" போன்றோரும் ரசியாவில் "ஆண்ரியோ" போன்றோரும் இத்தாலியில் "பிராண்ட்" போன்றோரும் இவ் இயக்கத்தின் பிரதி நிதிகளாகத் தொழிற்பட்டனர். இவர்கள் அனைவரும் மக்களின் எதிர்ப்புணர்விற்கு முக்கியத்துவம் கொடுத்து புரட்சிகரமான சமுதாய அமைப்பினைக் கொண்டு வருவதற்கான கருத்தினை வெளிப்படுத்தினர். இவர்கள் மக்களோடோ அல்லது சமுதாய அமைப்போடோ இணைந்து தம் இயக்கத்தை அழிக்காமல் எதிர்த்து நின்று போராடி வெற்றி பெறவேண்டும் என இவ் இயக்கம் வலியுறுத்தியது.

அரங்க வெளிப்பாட்டு வாதத்தின் நடிப்பு இயற்பண்பு வாதத்திற்கு முற்றிலும் மாறானதாக அமைந்திருந்தது. வெளிப்பாட்டு வாதமானது 1918ம் ஆண்டு முதல் 1923ம் ஆண்டு வரை மிகுந்த செல்வாக்குப் பெற்று வந்துள்ளதாயினும் பின்னைய காலங்களில் ஏனைய இயக்கங்களின் வளர்ச்சியினாலும் இதன் போதாமையாலும் செல்வாக்கிழந்து போகிறது. ஆயினும் இன்று இதன் தொடர்ச்சி பயில் நிலையில் இருப்பதனை சில படைப்புக்களின் ஊடாகக் கண்டு கொள்ள முடிகிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "கல்யாணி" குறுவினா விடைப் போட்டி – இல 04/2002

## போட்டி விதிகள்

☆ இதற்கான விடைகளை கல்யாணியில் இறுதியாக இணைக்கப் பட்டுள்ள கூப்பனுடன் இணைத்து அனுப்பவும்.

☆ அனைவரும் பங்கு கொள்ளலாம். ஒருவர் எத்தனை விடைகளையும் அனுப்பலாம். ஒவ்வொன்றும் 'கல்யாணி' யில் இணைக்கப்பட்டுள்ள கூப்பனுடன் அனுப்புதல் வேண்டும்.

☆ சரியான விடைகளைப் பலர் அனுப்பும் பட்சத்தில் பரிசிற்குரியவர் சீட்டிழுப்பின் மூலம் தெரிவு செய்யப்படுவார். ஆசிரியரின் தீர்ப்பே இறுதி முடிவாகும். பரிசுத் தொகை ரூபா 150/-

☆ விடைகள் வந்து சேரவேண்டிய தினம் 2003-04-05 ஆகும்.

☆ விடைகள் ஒருசொல்அல்லது சிறுவாக்கியத்தில் அமைதல்வேண்டும்.

☆ பரிசிற்குரியவரின் பெயர் விபரம், சரியான விடைகளும் அடுத்த வெளியீட்டில் இடம்பெறும். பரிசிற்குரியவர் முகவரிக்கு விபரம் அனுப்பப்படும். அவர் நேரில் வந்து பரிசினைப் பெற்றுச் செல்லலாம்.

## வினாக்கள்

### 1. பின்வரும் கூற்றுக்கள் சரியா (√) பிழையா (×) என்பதனை குறியிட்டுக் காட்டுக.

1) நாடகம் நெறியாளனின் படிமத்தினால் படைக்கப்படுகிறது. ( )
2) உணர்ச்சி நிலையை அரங்கில் உயர்த்த இசை பயன்படுகிறது. ( )
3) ஏட்டு அண்ணாவியாரை சிங்களத்தில் "பொத்தேகுரு" எனஅழைப்பர். ( )
4) மனிதவாழ்வை அர்த்தமற்றது எனக்கூறுவது அபத்த நாடகம் ஆகும். ( )
5) சமூக கண்ணாடியாக நாடகம் விளங்குவது இல்லை. ( )

6) கலையின் பயன்களுள் முதன்மையானது.
 1. சிந்திக்க தூண்ட வைப்பது
 2. அறிவுரை வழங்குவது
 3. அழகியல் இன்பத்தை வளங்குவது

7) குரூர அங்கின் பிதாமகன் என அழைக்கப்படுபவர்.
 1. மெனிஞ்சன் பிரபு 2. ஆட்டுவாட் 3. மேயர் கோல்ட்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8) யப்பான் அரங்கில் சீனாவினதும் கொரியாவினதும் பாதிப்புற்ற அரங்க வடிவங்கள்.
1. நோ, கபூக்கி 2. ஜீகாகு, புகாகு 3. பன்றுக், ஒபேரா

9) காவிய அரங்க செயற்பாடுகளை முதன்முதலில் ஆரம்பித்தவர்.
1. டேவிற் பொலஸ்கோ 2. கலாநிதி மௌனகுரு
3. பிக்காட்

10. சேக்ஸ்பியர் கால பொது அரங்குகளின் உயரம் அண்ணளவாக எவ்வளவு?
1. 7, 8 அடி உயரம் 2. 4, 6 அடி உயரம் 3. 3, 5 அடி உயரம்

## 2. பொருந்தாத குறிப்பை கண்டறிந்து அடையாளம் இடுக.

1) 1. கம்லெட் 2. ஒதெல்லோ 3. கிங்கிலியர் 4. வெனிஸ்நகர வணிகன் என்பன சேக்ஸ்பியரின் அவலச்சுவை நாடகங்கள் ஆகும்.

2) 1. காதல்ஜோதி 2. வேலைக்காறி 3. பாவையின்பயணம் 4 தண்ணீர் தண்ணீர் என்பன அறிஞர் அண்ணாவால் எழுதப்பெற்ற நாடகங்கள் ஆகும்.

3) 1. காலம் 2. இடம் 3. இயக்கம் 4. செறிவு என்பன அரிஸ்ரோட்டிலால் கூறப்பட்ட ஒன்றியைபு ஆகும்.

4) 1. படிம அரங்கு 2. கண்ணுக்குப் புலனாகா அரங்கு 3. விவாதக்கள அரங்கு 4. மோடிமை அரங்கு என்பது ஒகஸ்ர போலின் அரங்க வடிவங்கள் ஆகும்.

5) கோமடிய எரிடியா என்ற நாடக மரபின் முக்கிய எழுத்தாளர் அல்லாதோர்?
1. ந. சுந்தரலிங்கம் 2. மேயர் கோல்ட்
3. இப்சன் 4. அரியஸ்டோ

## 3. குறுவிடை தருக.

1. எதிரிவீர சரச்சந்திராவின் இயற்பெயர் யாது?
2. இந்தோனேசியாவின் தேசிய நடனவடிவம் யாது?
3. மனோரதியவாத நாடக எழுத்தாளர் இருவரின் பெயர் தருக?
4. அமெரிக்க நாடக ஆசிரியர் ஆன டெனிசி விலியம் இனால் எழுதப் பெற்ற சிறந்த நாடகம் ஒன்று தருக.
5. அபத்த நாடக ஆசிரியர் மூவரின் பெயர் தருக?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரங்கியற் பதங்கள்

| | | |
|---|---|---|
| 60) | ஓரங்க நாடகம் | One Act play |
| 61) | ஒளியூட்டுகை | Lighting |
| 62) | கரு | Theame |
| 63) | கருத்துக் களம் | Forum |
| 64) | கருநிலைப் படிமம் | Theatre image |
| 65) | கதைச் சுருக்கம் | Synopsis |
| 66) | கதைப் பின்னல் | Plot |
| 67) | கருத்தாடல் | Discourse |
| 68) | கரண அரங்கு | Ritual theatre |
| 69) | காட்சித் தொகுதியாக்கல் | Picturisation |
| 70) | காட்சிக் (கூறுகள்) கலைகள் | Visual Arts |
| 71) | காண்பியங்கள் | Visual |
| 72) | காலம் | Time / Period |
| 73) | காவிய நாடகப் பாணி | Epic theatre |
| 74) | காட்சி (விதானிப்பு) அமைப்பு | Scene design |
| 75) | கிராமியக் கலைகள் (நாட்டார் கலைகள்) | Folk Arts |
| 76) | கிளவிகள் | Words |
| 77) | குளோப் நாடகம் | Globe theatre |
| 78) | குறியீட்டமர்வு | Symbolic |
| 79) | குரலும் பேச்சும் | Voice and speach |
| 80) | குறிப்பிட்ட பார்ப்போர் | Particular Audiance |
| 81) | கூட்டு நாடகவாக்கம் | Pantomime |
| 82) | கூட்டுக்கலை | Joint Arts |
| 83) | கேள்விக் (கூறுகள்) கலைகள் | Aural Arts |
| 84) | கையிருப்பு பாத்திரங்கள் | Stock Charachter |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாடகப் படிமங்களின் பரிமாணங்கள்

**நடிப்பு, இடம், சூழல், நேரம், ஒளி, ஒப்பனை – அலங்காரம்**

☆ இடம் : நாடகப் பாத்திரங்கள் தோன்றும் பின்னணி - வீடு, வாசல், காடு, வெளி போன்ற புழங்கும் இடங்கள்

☆ சூழல் : நாடகத்தின் இனிமையான அல்லது இக்கட்டானது போன்ற சந்தர்ப்பங்கள், பருவநிலைகள்.

☆ நேரம் : இரவு - பகல் முதலியன

☆ ஒலி, ஒளி : சூழலின் சாயல்கள், நேரத்தின் நிறங்கள் உள்மனதின் உணர்வுகள், கற்பனை ஸ்தூலங்கள் மற்றும் கவன ஈர்ப்புச் சக்திகள்

☆ ஒப்பனை, அலங்காரம் : பாத்திரங்களின் குண அமைப்பு, சமூக அந்தஸ்து, ருசி கவன ஈர்ப்பின் சாதனங்கள்.

*நன்றி, அரங்கின் பரிமாணங்கள்*

✂ ------------------------------------------------

## இணைக்கப்பட வேண்டிய கூப்பன்

முழுப்பெயர்:-.........................................................

முகவரி:- :-.........................................................

கல்லூரி:- :-.........................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அட்டைப்படம்

எமது நாடக அரங்கச் செயற்பாட்டிற்கு வளமூட்டிக் கொண்டிருக்கும் அன்னை

திருமதி ச. கல்யாணசுந்தரேசன் (B. Sc. M . A)

அவர்கள்

**அவரவர் ஆக்கங்களின் கருத்துக்களுக்கு அவரவரே பொறுப்பாவர்.**

***

கல்யாணி வாசகர்களிடமிருந்து ஆக்கங்களையும், ஆலோசனைகளையும் அன்புடன் எதிர்பார்க்கின்றது.

உங்களது சகல தொடர்புகளுக்கும்

கல்யாணி,
அவைக்காற்றுகைக் குழு,
கே. கே. எஸ் றோட்,
மருதனார்மடம், சுன்னாகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

For Modern
And Distinctive


*Aticies Are All Guaranteed & Genuine For
Quality Jewels*

# SHANUGA
## JEWELLERS

எம்மியப ன நகைத்தெரிவுக்கு ராசியான இடம்

## சாணுகா ஜுவல்லர்ஸ்

(அழகு நகைகளின் அரங்கம்)



200G, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

**200G, Kasthuriar Road,
Jaffna.**


Cover Print by: Guru Printers, Thirunelvely.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org